Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 319 | சனிக்கிழமை | புரட்டாதி 30 ஆம் நாள் 16 ஒக்ரோபர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

### விவசாயிகள், மீனவர்களுக்கு ஆதரவான

# போராட்டத்துக்கு கூட்டமைப்பு அழைப்பு விடுக்கவேயில்லை!

## பங்காளிக் கட்சிகள் கூட்டாகத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 16

“எதிர்வரும் 17, 18ஆம் திகதிகளில் போராட்டம் நடத்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் விடுத்துள்ள அழைப்பு பற்றி எமக்கு எதுவும் தெரியாது, கூட்டமைப்பு அந்த அழைப்பை விடுக்கவில்லை” என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 3 பங்காளிக்கட்சிகளின் தலைவர்களும் தெரிவித்துள்ளனர்.

15

## படகுகளை ஏற்க மறுத்த கடற்படை

யாழ்ப்பாணம், ஒக். 16

அத்துமீறிய இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்த குற்றச்சாட்டில், நேற்று முன்தினம் 23 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தநிலையிலும், அவர்கள் பயணித்த இரண்டு இழுவைப் படகுகளையும் கடற்படை

15

## விபத்தில் காயமடைந்த இளைஞன் உயிரிழந்தார்

கொடிகாமம், ஒக். 16

மூன்று வாகனங்கள் மோதிய விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.

இந்த விபத்து மீசாலை மடத்தடி ஏ9 வீதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது. சம்பவத்தில், சங்கத்தானை மீனாட்சி அம்மன் வீதியைச்

15



## போராடுகின்றோம் என வேஷம் போடுகின்றனர்

*சுமந்திரனை மறைமுகமாகச் சாடுகிறது தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம்*

யாழ்ப்பாணம், ஒக். 16

“தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிராகச் செயற்பட்டவர்கள், இன்று மீனவர்களுக்காக போராடுகின்றோம் என்று வேஷம் போடுகின்றனர்” என்று தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளர் இன்பம் குற்றஞ்சாட்டினார். அவர்களுடைய நோக்கம் இந்த பிரச்சினையை தீர்த்து

15



“அப்போ அண்டைக்கு வயலுக்குள்ள விவசாயி மாதிரி உழுது, பொங்கி பேய்க்காட்டின மாதிரி போராட்ட அழைப்பும் இன்னொரு சுத்துமாத்தா கோபால்”

## உள்ளூர் பால்மாவின் விலையும் எகிறியது

யாழ்ப்பாணம், ஒக். 16

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பால்மா வகைகளின் விலையும் அதிகரித்துள்ளது. என்று மில்கோ தலைவர் தெரிவித்துள்ளார். அதற்கமைய, 400 கிராம் ஹைலண்ட் பால்மாவின் விலை 90 ரூபா

15

### மாகாண எல்லையில்

## 21ஆம் திகதிவரை கடும் கட்டுப்பாடு

### ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஒக். 16

நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை, எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை வரை கடுமையாகக் கடைப்பிடிக்கத் தீர்

14

## தொற்று பரவும் வகையில் மாணவருக்கு பகிடிவதை

***பேராதனைப் பல்கலையின் 70 மாணவர்கள் இடைநீக்கம்***

கொழும்பு, ஒக். 16

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கியல்

15

## சட்டமா அதிபரும் கரன்னகொடவும் மன்றில் முன்னிலையாகவேண்டும்

***மேன்முறையீட்டு நீதிமன்று கட்டளை***

கொழும்பு, ஒக். 16

11 தமிழ் இளைஞர்களைக் கடத்தினாரெனக் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் கடற்படைத்தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொட மற்றும் சட்டமாஅதிபர் ஆகியோரை எதிர்வரும் 29ஆம் திகதி மன்றில் முற்படுமாறு மேன்முறையீட்டு நீதிமன்று கட்டளை பிறப்பித்துள்ளது.

வசந்த கரன்னாகொடவுக்கு எதிராக விசேட மூவரடங்கிய மேல்

15

## வாயால் வடைசுடும் டக்ளஸ்

*சாணக்கியன் கிண்டல்*

மட்டக்களப்பு, ஒக். 16

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வாயால் மாத்திரமே அமைச்சருக்கான வேலைகளைச் செய்கின்றார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்

14



### மற்றொரு வழக்கிலிருந்தும்

## பஸில் விடுதலை

கொழும்பு, ஒக். 16

அமைச்சர் பஸில் ராஜபக்ச மற்றுமொரு வழக்கிலிருந்து நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார். திவிநெகும திட்டத்தில் அரசாங்கத்தின் 356 லட்சம் ரூபாவுக்கும் அதிக தொகையை

14


## “முதலமைச்சராக போட்டியிடத் தயார்!”

### விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 16

"தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இணைந்து நீங்கள் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட வேண்டும் எனக்கேட்டால் அது என்னுடைய கடமை என ஏற்று மீண்டும் களத்தில் குதிக்கத் தயாராக

15



# 40 சிங்களக் குடும்பங்களுக்கு காரைமுனையில் 5 ஏக்கர்!

## நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

மட்டக்களப்பு, ஒக்.16

வாகரை, காரமுனையில் தலா 5 ஏக்கர் வீதம் 40 பெரும்பான்மையினக் குடும்பங்களுக்கு காணிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும், எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் அவை வழங்கப்படவுள்ளன என்றும் தெரியவந்துள்ளது.

இந்தக் குடியேற்றம் தொடர்பான கடிதங்கள் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்துக்கு கிடைத்துள்ளன என்றும் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாகரை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட காரமுனையில் சிங்களக் குடியேற்றத்தை மேற்கொள்வதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன என்று பிரதேச மக்களால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

178 சிங்களக் குடும்பங்களை அந்தப் பகுதியில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும், அந்தக் குடும்பங்கள் 1985ஆம் ஆண்டு போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் எனக் காரணம் கூறப்படுகின்றது என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்திருந்தனர்.

அந்த 178 குடும்பங்களும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்றும், அவர்கள் முன்னர் வசித்திருந்தால் 1981ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் அவர்களின் பெயர்கள் இருந்திருக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

தற்போது அந்தப் பகுதியில் 40 பெரும்பான்மையினக் குடும்பங்களை குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது என்று தெரியவருகின்றது. அந்தக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா 5 ஏக்கர் வீதம் காணிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்குரிய கடிதங்கள் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்துக்கு உரிய தரப்பால் அனுப்பப்பட்டுள்ளன என்றும் அறிய முடிகின்றது.

இந்தக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்த மக்கள் பிரதிநிதிகள் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# உணவு உற்பத்தியில் 2ஆண்டுகளில் தன்னிறைவு

## வடக்கின் புதிய ஆளுநர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 14

வடக்கு மாகாணம் உணவு உற்பத்தியில் 2 ஆண்டுகளில் தன்னிறைவு அடையவேண்டும். இந்த இலக்கின் அடிப்படையில் நான் பணியாற்றுவேன். இவ்வாறு வடக்கின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள ஜீவன் தியாகராஜா 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் வந்து அடுத்த வாரம் கடமைகளைப் பொறுப்பேற்பேன். எப்போது என்று இதுவரை தீர்மானிக்கவில்லை. ஆனாலும், நான் பணிகளை ஆரம்பித்துவிட்டேன்.

50 க்கும் மேற்பட்ட விடயப் பரப்புகளை இனம் கண்டுள்ளேன். அவை தொடர்பில் விரிவாக ஆராய்ந்து அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மக்கள் அலுவலர்களை நோக்கி வந்து பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் அல்லாமல், அதிகாரிகள் மக்களைத் தேடிச் சென்று பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் புதிய முறைமையை உருவாக்குவேன்.

எனது எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கடமைகளைப் பொறுப்பேற்றதும் ஊடக சந்திப்பு நடத்தி விவரமாக வெளியிடுவேன்- என்றார். (ஒ,5)

# தொற்று 666 சாவு 20

கொழும்பு, ஒக். 16

இலங்கையில் மேலும் 20 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

அதன்படி, நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 449 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ள 20 பேரில் 11 ஆண்களும், 9 பெண்களும் அடங்குகின்றனர்.

இதில் 30 வயதுக்கு உட்பட்ட பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 3 ஆண்களும் இரண்டு பெண்களுமாக 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை,60 வயதுக்கு மேற்பட்ட 14 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 8 ஆண்களும், 6 பெண்களும் அடங்குகின்றனர்.

இதேவேளை, இலங்கையில் நேற்று 666 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 30 ஆயிரத்து 421 ஆக் எகிறியுள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 354 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 91 ஆயிரத்து 958 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

# ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினருக்கு அமைச்சரின் இணைப்பாளர் பதவி

வவுனியா, ஒக். 16

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்.) வவுனியா நகரசபை உறுப்பினர் சமந்தா செபநேசராணி, இராஜாங்க அமைச்சரின் வவுனியா மாவட்ட இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மகளிர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி முன்பள்ளி. ஆரம்பக்கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் கல்வி சேவைகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த டி.சில்வாவின் வவுனியா மாவட்ட மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு இணைப்பாளராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நியமனமானது, இராஜாங்க அமைச்சரின் அலுவலகத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

குறித்த நியமனம் தொடர்பில் சமந்தா செபநேசராணியிடம் கேட்டபோது, "இந்த நியமனம் பெண்கள், சிறுவர்களுக்கு பணியாற்றுவதற்காக எனக்கு இராஜாங்க அமைச்சரால் வழங்கப்பட்டுள்ளது. நான் கட்சி தாவவில்லை. தற்போதும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்.) உறுப்பினராகவே வவுனியா நகர சபையில் தொடர்கின்றேன்." எனத் தெரிவித்தார்.

இதேவேளை, முன்னாள் முதலமைச்சரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரனின் கூட்டணிக் கட்சிகளில் ஈ.பி.ஆர்.எல்.எப். பிரதான பங்காளிக் கட்சியாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-18)

# சோதனைச் சாவடியில் கஞ்சாவுடன் இருவர் கைது



மன்னார், ஒக். 16

கேரளக் கஞ்சா கொண்டுசென்றனர் என்ற குற்றச்சாட்டில், மன்னார் குஞ்சுக்குளம் இராணுவச் சோதனைச் சாவடியில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பட்டா ரக வாகனத்தில் கடத்தி செல்லப்பட்டபோது 4 கிலோ 50 கிராம் கேரளக் கஞ்சாவுடன் அவர்கள் கடந்த புதன்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள், செட்டிகுளம் பகுதியை சேர்ந்த 25 மற்றும் 27 வயதுடையவர்கள் ஆவர். (த-213)

# ஹெரோய்ன் வர்த்தகர்கள் மூவர் யாழில் நேற்றுக் கைது

மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரின் மூன்று நாள்கள் தொடர் சுற்றிவளைப்பில் பெருமளவு ஹெரோய்னுடன் 3 வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் போதை தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி மேனன் தலைமையிலான குழுவினர் கடந்த மூன்று நாள்களாக மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 10 கிராமுக்கும் மேற்பட்ட ஹெரோய்ன் போதைப்பொருள்கள் மீட்கப்பட்டன. அவற்றை விற்பனைசெய்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து யாழ் நகரப்பகுதியில் தங்கியிருந்த வண்ணம் ஹெரோய்ன் விற்பனையில் ஈடுபட்டுவந்த கெப்பிட்டிக்கொலாவ பகுதியை சேர்ந்த 58 வயதுடைய நபரிடமிருந்து 2 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது.

யாழ். குருநகர் பகுதியில் ஹெரோய்ன் விற்பனையில் ஈடுபட்டுவந்தார் என்ற குற்றச்சாட்டில் 38 வயதுடைய நபர் 2 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோய்னுடன் கைதுசெய்யப்பட்டார்.

யாழில் இருந்து கொழும்புக்குச்சென்று ஹெரோய்ன் போதைப்பொருள்களை விற்பனைக்காக வாங்கி வந்தார் என்ற குற்றச்சாட்டில், யாழ். பொம்மைவெளி பகுதி நபர், 5 கிராம் ஹெரோய்னுடன் கைதுசெய்யப்பட்டார்.

அவர்களிடம் நடத்திய விசாரணையில் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் குறித்த போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் முக்கிய சூத்திரதாரிகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்வதற்காக 5 நாள்கள் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணைகள் மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கியது. (த-20)

# அங்கஜனின் செயற்பாட்டுக்கு பிரதேச சபையில் கண்டனம்!

**வலி.தென்மேற்கு, ஒக்.16**

**நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் பிரதேச சபைக்குரிய அதிகாரங்கள் என்னவென்பது தெரியாது பேசுகின்றார். பொதுமக்களுக்கு முன்பாக பிரதேச சபை உறுப்பினர்களுக்கு சங்கடம் ஏற்படும் வகையில் செயற்படுகின்றார். இது மிகவும் கண்டனத்துக்குரியது**

இவ்வாறு வலி.தென்மேற்கு பிரதேச சபையில் சுட்டிக்காட்டப்பட்டது.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் 43 ஆவது அமர்வு, தவிசாளர் ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது. அதிலேயே இந்தக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், கிராம மட்டச் சந்திப்பு ஒன்றை நடத்திய போது, பெண் ஒருவர் தனக்கு வீடமைப்புத் தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் அந்த வட்டாரத்தின் பிரதேசசபை உறுப்பினர் யார் என்று அழைத்ததுடன், பிரதேச சபை ஊடாக அந்தப் பெண்ணுக்கு வீடு அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கூறினார்.

வீடு அமைப்பதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் உள்ளதா?, இவ்வாறான கருத்துக்கள் மூலம் சபை உறுப்பினர்களை சங்கடத்துக்கு ஆளாக்குவதுடன், மக்கள் மத்தியில் தவறான எண்ணப்பாட்டையும் நாடாளுமன்ற உறுப்பினர் உருவாக்குகின்றார் என்று சபை உறுப்பினர் சபை அமர்வில் தெரிவித்தார். அதன்பின்னர் கருத்துத் தெரிவித்த தவிசாளர், நாடாளுமன்ற உறுப்பினரின் செயற்பாடு கண்டனத்துக்குரியது. பிரதேச சபையால் வீடு அமைத்துக் கொடுப்பதற்கு எந்த சட்ட ஏற்பாடும் இல்லை. குறித்த நாடாளுமன்ற உறுப்பினர், நாடாளுமன்றத்தில் உரிய சட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றி, நிதியைப் பெற்றுத் தந்தால் பிரதேச சபை வீடமைத்துக் கொடுக்கத் தயாராகவே இருக்கின்றது என்று தெரிவித்தார்.

ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக இருந்து கொண்டு நடைமுறைகள் தெரியாது செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினரின் செயற்பாடுகளுக்கு தவிசாளர் கண்டனம் தெரிவித்தார்.

(எ-319)



# அப்துல்கலாமுக்கு யாழில் அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஒக்.16

இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர். அப்துல் கலாமின் 90 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, யாழ்ப்பாணத்தில் சிறப்பு நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்.பொது நூலகத்தின் 'இந்தியா கோனரில்' அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு, யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரகத்தின் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். (ஒ-4)

# திருமலையில் கைதானவர்களுக்கு வெளிநாடு செல்லும் நோக்கமில்லை

**அனைவரும் பிணையில் விடுவிப்பு**

கிளிநொச்சி. ஒக்.16

வெளிநாடு செல்லும் நோக்குடன் இரு வேறு விடுதிகளில் தங்கியிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 65 நபர்கள் மற்றும் விடுதி முகாமையாளர்கள் இருவர் உள்ளிட்ட 67 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தின் 45 ஆம் பிரிவை மீறினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபர்கள், கடந்த புதன்கிழமை திருகோணமலை பிரதான நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்ட வாதத்தின் பிரகாரம் அன்றைய தினம் தாயும், இரண்டு சிறுவர்களும் சுய சரீர பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் குறித்த நபர்களோடு சமையல் வேலைகளுக்காக வருகை தந்தனர் என்று சட்டத்தரணிகளால் வாதம் முன்வைக்கப்பட்டது. ஏனைய 65 நபர்களும் நேற்று வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் நேற்று நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பிட்ட சமர்ப்பணங்களின் அடிப்படையில் தலா ஒரு லட்சம் ரூபா சரீர பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் கனடா செல்ல முயற்சித்தனர் என்று ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

எனினும் இவர்கள் வடமாகாணத்தின் பல்வேறு கிராமங்களில் இருந்து திருகோணமலையில் உள்ள துறைமுகம் மற்றும் பிறீமா போன்ற தொழிற்சாலைகளில் கூலி வேலைகளுக்காகச் சென்றவர்கள் என்று நீதிமன்றில் சுட்டிக்காட்டப்பட்டது. இதில் திருப்தி அடைந்த நீதிவான் அனைவரையும் சரீரப் பிணையில் விடுவித்துள்ளார்.

இந்த வழக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது என்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

(ஒ-4-6)

# துப்பாக்கி ரவைகளுடன் குடும்பத் தலைவர் கைது!

முல்லைத்தீவு, ஒக்.16

துப்பாக்கி ரவைகள் வைத்திருந்த குற்றச்சாட்டில் முல்லைத்தீவு அம்பலவன்பொக்கணை பகுதியில் குடும்பத் தலைவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரது வீட்டை சோதனை செய்தபோது வீட்டு வளாகத்தில் இருந்து துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் வயல் நிலத்தை பண்படுத்தும் போது இந்த ரவைகள் கிடைக்கப்பெற்றன என்று சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பொலிஸாருக்கு தகவல் எதுவும் வழங்கப்படாத நிலையில் வீட்டின் உரிமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஜ-19)




**முந்தின ஆட்சிக்காலத்திலையும் புது அரசமைப்பு இந்தா வருது அந்தா வருது என்று 'சிங்கக்கொடி ஏந்தின எங்கட ஐயா' சொல்லிக் கொண்டிருந்தவர். இப்ப இந்த ஆட்சியிலையும் புதுஅரசமைப்பு வரும் எண்டு நம்பிக் கொண்டிருக்கிறார். அந்தாள் இப்ப நம்பிறதுக்கும் காரணம் இருக்கு எண்டு பட்சிக்கு ஓராள் சொல்லிச்சுது.**

**புது அரசமைப்பு உருவாக்கிற நிபுணர் குழுவில இருக்கிற ஜனாதிபதி சட்டாம்பியாரோட கூட்டமைப்பின்ர சட்டாம்பியாருக்கு நெருக்கமான உறவு இருக்காம். இவரோட அடிக்கடி கதைச்சுத்தான் வேலை நடக்குதாம். அதாலதான் ஐயா புது அரசமைப்பு வேலைகள் ஸ்பீட்டா நடக்குது எண்ட மாதிரி நம்புறாராம். கூட்டமைப்பு சட்டாம்பியார் முந்தி ஆட்சிக் காலத்தில வார்த்தையை வைச்சு விளையாடினவர். பௌத்தத்துக்கு முதலிடம் கொடுக்கிறது பிரச்சினையில்லை எண்டு சொன்னவர்.**

**வடக்கு - கிழக்கு இணைப்பு இல்லை எண்டவர். அந்த ஆட்சிக் காலத்திலேயே இப்பிடியெல்லாம் விட்டுக் கொடுத்துத்தான் புதுஅரசமைப்பு உருவாக்கிற வேலையைச் செய்தவர். அப்ப இந்த ஆட்சிக் காலத்தில என்னென்னத்தை விட்டுக் கொடுத்து அவையோட சேர்ந்து கூத்தடிக்கிறாரோ தெரியேல்ல. புதுஅரசமைப்பு உருவாக்கம் சம்பந்தமாய் நடக்கிற விசயங்கள் ஒண்டும் இரண்டு பக்கத்தாலையும் கசியாம கவனமாப் பார்த்துக் கொள்ளுகினம். அப்பிடிக் கசிஞ்சால் முந்தின மாதிரி குழப்பம் வந்திடும் எண்டு. முந்தி குழப்பம் விளைவிச்சவை யோசிக்கினம் போல.**

**எப்படியும் இரண்டொரு மாதத்துக்குள்ள புது அரசமைப்பு வரைவு வரும் எண்டு பட்சிக்கு ஒரு தகவல் கிடைச்சது. எதுக்கும் வரேக்க பார்ப்பம், என்னென்ன சுத்துமாத்துக்கள் நடந்திருக்கு எண்டு.**

⅄ ⅄ ⅄

**யாழ்ப்பாணத்தில கொஞ்ச டி.எஸ்.மாரை இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கவேண்டும் என்று புலிகேசியார் கட்டளை போட்டிருக்கிறாராம். அவை 12 வருசம் மாவட்டத்தில சேவை முடிச்சிட்டினம். அதால வேற இடம் போகவேணும் என்று அவர் சொல்லியிருக்கிறாராம்.**

**அரச நிர்வாக நடைமுறைப்படி அவை போகத்தான்வேணும். அதில வேறை கதையில்லை. ஆனா, இதை எல்லாரிட்டையும் நடைமுறைப்படுத்தவேணும்.**

**'கனவு பாழாப்போன எம்.பி.க்கு' வேண்டப்பட்ட ஆக்களை விட்டுட்டு மற்ற ஆக்களை மாத்திறதுக்கு மாத்திரம் துடியாய்த் துடிக்கிறது சரியில்லை.**

**அதைவிட இப்ப இருக்கிற நிலைமையில 12 வருசம் தாண்டின ஆக்களை அனுப்பினா நிர்வாகம் செத்துப்போற நிலைமைக்கு வந்திடுமாம். அதுக்காக மற்ற ஆக்கள் ஒண்டும் திறமையில்லாதவை எண்டு சொல்ல வரலே. அனுப்பேக்க அனுபவமான ஆக்களை கூண்டோட அனுப்பாம கட்டம் கட்டமா அனுப்பினா நல்லம் எண்டுதான் பட்சி சொல்லுது.**

**நல்லதைச் சொன்னா ஆரும் கேப்பினமோ?**



- பட்சி

# ஆசிரியர்களைத் தடுத்தால் கடும் சட்ட நடவடிக்கையாம்

## அதிபர் ஆசிரியர் தொழிற்சங்கங்களுக்கு அமைச்சர் சரத்வீரசேகர எச்சரிக்கை



**கொழும்பு, ஒக்.16**

**கடமைக்கு சமுகமளிக்க விரும்பும் ஆசிரியர்களுக்கு எவராவது இடையூறு விளைவித்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் போதாதென்றால் அது நிச்சயம் அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால் ஒரு விடயத்தை கருத்திற்கொள்ள வேண்டும். பயங்கரவாதத்தை நாம் தோற்கடித்தோம். பயங்கரவாதம் தலைதூக்கியதற்கான காரணம் நியாயமாக அல்லது அநியாயமாக இருந்திருக்கலாம். ஆயினும் பயங்கரவாதத்தை நியாயப்படுத்த முடியாது. ஏனெனில் அதனால் அப்பாவி மக்களே உயிரிழப்பார்கள். அதேபோல ஆசிரியர்களின் பிரச்சினை நியாயமானதாக அல்லது அசாதாரணமாக இருக்கலாம். ஆனால் அவர்களால் முன்னெடுக்கப்படும் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கை ஏற்றுக்கொள்ளமுடியாதது. ஏனெனில் இந்தப் போராட்டத்தால் மாணவர்களே பாதிக்கப்படுகின்றனர்.

எதிர்வரும் 21 ஆம் திகதி பாடசாலைக்கு சமுகமளித்து கல்வி நடவடிக்கையை ஆரம்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

நிறைய ஆசிரியர்கள் என்னுடன் உரையாடினர். தாம் விருப்பத்துடன் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவில்லை எனவும், அழுத்தம் காரணமாகவே அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுகின்றோம் என்றும் குறிப்பிட்டனர். சேவைக்கு வரும் ஆசிரியர்களை எவராவது அச்சுறுத்தினால் அவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.-என்றார். (எ-44)

# புலனாய்வாளர்கள் மிரட்டல் தப்பியோடும் தமிழ் இளையோர்

## கனேடியத் தூதுவரிடம் களநிலைமையை விளக்கினார் சிறீதரன் எம்.பி.

யாழ்ப்பாணம்,ஒக்.16

தமிழ் இளைஞர்கள் புலனாய்வு அச்சுறுத்தலால் நாட்டைவிட்டு வெளியேற எத்தனிக்கின்றார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இலங்கைக்கான கனேடியத் தூதுவரிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மிக்கினோனுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கனேடியத் தூதுவருடான இந்தக் கலந்துரையாடல் ஆரோக்கியமாக இருந்தது. இதன் போது தற்போது இருக்கும் அரசாங்கம் தமிழர்களை நசுக்குவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

தமிழர்கள் தமது உணர்வுபூர்வமான நினைவேந்தல்களை மேற்கொள்வதற்கு இப்போது இருக்கும் அரசாங்கம் கொரோனாவை சாட்டு வைத்து தடைகள் விதிக்கின்றது. அதனை மீறி நினைவேந்தல்கள் இடம்பெற்றால் புலனாய்வாளர்கள் மூலமாக நினைவேந்தலில் கலந்து கொண்டவர்களை அச்சுறுத்துகிறது. ஆனால் அரசாங்கம் பெரிய விழாக்களை எந்தவித தடைகளும் இன்றி நடத்துகின்றது.

அத்துடன் புலனாய்வாளர்களின் அச்சுறுத்தலாலும் தமிழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதில் உள்ள பின்னடைவாலும் இலங்கையின் வட பகுதியில் உள்ள தமிழ் இளைஞர்கள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

தொல்பொருள் என்ற போர்வையில் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. இதேவேளை மாகாண சபைகளின் அதிகாரத்துக்கு இருக்கின்ற பாடசாலைகள், மருத்துவமனைகளின் அதிகாரங்கள் பறிக்கப்படுகின்றன.

கனேடிய அரசாங்கம் மனிதாபிமானத்துடனும் பக்கச்சார்பு இன்றியும் தொடர்ந்தும் ஜெனிவாத் தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு தருவோம் என கனேடிய தூதுவரின் உறுதிமொழியோடு கலந்துரையாடல் சுமுகமாக முடிந்தது - என்றார். (ஐ-6)

# பணிக்குச் சென்றாலே சம்பளம் கிடைக்கும்!

## ஆசிரியர் சம்பள முரண்பாட்டில் முருந்தெட்டுவ தேரர் எச்சரிக்கைத் தொனி



கொழும்பு, ஒக்.16

அரசு கொடுத்துள்ள வாக்குறுதிகளை நம்பி அதிபர்கள், ஆசிரியர்கள் போராட்டத்தைக் கைவிட வேண்டும். அவர்களுக்கு நான் சாட்சியமாக இருந்து வாக்குறுதியளிக்கின்றேன். அதே நேரம் ஆசிரியர்கள் பணிக்குச் சென்றால் தான் சம்பளம் கிடைக்கும் என்பதை சகலரும் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார் அபயராம விகாரையின் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

அரசு கொடுத்துள்ள வாக்குறுதிகளை மீறினால் 38 ஆயிரம் ஊழியர்கள் அங்கம் வகிக்கும் எமது தாதியர் சங்கத்தையும் இணைத்துக் கொண்டு ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை வெற்றிகொள்ள அரசை எதிர்த்துக் களமிறங்குவேன்.

ஒரு சில தொழிற்சங்கங்கள் ஆசிரியர், அதிபர் பிரச்சினைகளை அரசியல் மயமாக்க நினைக்கின்றனர். அதைக் கைவிட வேணடும். ஆசிரியர், அதிபர்கள் போராட்டம் இப்போது 90 நாள்களுக்கும் மேலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதனால் மாணவர்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

நியாயமான கோரிக்கைகளை ஆசிரியர்கள் சங்கங்கள் கையில் எடுத்துப் போராடினாலும், அவற்றையெல்லாம் தாண்டி மாணவர்களின் எதிர்காலம் தொடர்பாகச் சிந்திக்கவேண்டியுள்ளது. அதனாலேயே நான் தலையிட்டு அரச தரப்புடன் பேசினேன். ஆசிரியர் சங்கங்களும் நியாயமான கருத்துக்களைக் கூறவில்லை. அதேபோன்று இந்த விடயத்தில் அரசிடமும் நேர்மை இல்லை.

பிரதமர் மற்றும் சங்கங்கள் இணைந்து பேச்சு நடத்தியதில் இரண்டு கட்டங்களில் இந்தக் கொடுப்பனவுகளை வழங்கத் தீர்மானம் எடுக்கப்பட்டது. அதற்குத் தொழிற்சங்கங்கள் இணக்கம் தெரிவித்தனர். ஆனால் பேச்சின் போது பிரதமருடன் இணக்கம் தெரிவித்துவிட்டு வெளியில் வந்து மாற்றுக் கருத்துக்களை கூறுவது ஒழுக்கமான செயற்பாடு அல்ல.

ஒரு சில சங்கங்கள் அரசியல் நோக்கங்களுக்காக சகல ஆசிரியர்களையும் தவறாக வழிநடத்துவதை நிறுத்த வேண்டும். ஆசிரியர்கள் எதற்காகவும் அச்சப்பட வேண்டாம். நாம் முன்னணியில் நிற்கின்றோம் என்பதை உறுதியாக கூறியுள்ளோம். அதுமட்டும் அல்ல, ஆசிரியர்கள் பணிக்குச் சென்றால் தான் சம்பளம் கிடைக்கும் இல்லையேல் சம்பளம் வெட்டப்படும் என்பதையும் சகலரும் உணர்ந்துகொள்ள வேண்டும் - என்றார். (எ-இ)

# வங்கிக் கிளை பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 16

மல்லாகத்தில் இதுவரை காலமும் இயங்கி வந்த 'இலங்கை வங்கி - காங்கேசன்துறை கிளை' நாளை தொடக்கம் 'இலங்கை வங்கி - மல்லாகம் கிளை' என்று பெயர் மாற்றப்பட்டு செயற்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஔ.5)

# கொரோனாவால் பாதிக்கப்படும் அரச உழியர்களுக்கு இழப்பீடு

## பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவிப்பு



கொழும்பு,ஒக்.16

கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டு வீடுகளில் சிகிச்சை பெற்றுவரும் அரச ஊழியர்களுக்கு அக்ரஹார காப்புறுதி நிதியிலிருந்து இழப்பீடுகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச அறிவுறுத்தியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தொழிற்சங்கம் மற்றும் ஒருங்கிணைந்த தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அரச சேவையை செயற்றிறன் மிக்கதாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து தொழிற்சங்கத்தினர் பிரதமரிடம் எடுத்துரைத்தனர்.

அதற்கு அரச ஊழியர்களுக்கான தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான பயிற்சி நடவடிக்கைகளுக்கான வாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும் என பிரதமர் தெரிவித்தார்.

2016ஆம் ஆண்டின் பின்னர் அரச சேவையில் இணைந்து கொண்டவர்கள் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின்போது இழந்த ஓய்வூதியக் கொடுப்பனவை மீண்டும் பெற்றுக் கொள்வது தொடர்பில் தொழிற்சங்க பிரதிநிதிகள் இதன்போது கருத்துத் தெரிவித்தனர். இது தொடர்பில் ஆராயுமாறு பிரதமர், அரச சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு அந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்தார். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதற்கு ஏற்ப ஓய்வூதியக் கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டது. (ஐ)

## விபத்தில் ஒருவர் காயம்

கொடிகாமம்,ஒக்.16

மோட்டார் சைக்கிளும், முச்சக்கர வண்டியும் மோதியதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த விபத்து ஏ-9 வீதி சாவகச்சேரி மருத்துவமனைக்கு அருகாமையில் நேற்று இடம்பெற்றது.

நுணாவில் சாவகச்சேரியை சேர்ந்த 30 வயதுடைய ஒருவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-159)

## வீதி விபத்தில் பெண் காயம்

யாழ்ப்பணம்.ஒக்.16

சண்டிலிப்பாய் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

சண்டிலிப்பாயில் இருந்து தொட்டிலடி நோக்கிச் சென்ற லொறி ஒன்று வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது மோதியது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு காயமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-27)

## கலைஞர் விருதுகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்!

வவுனியா, ஒக்.16

“வவுனியம்”, “வவுனியம் முதுஇளவல்” மற்றும் “வவுனியம் கலை இளவல்”, ஆகிய விருதுகளுக்கு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கலைஞர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வவுனியம் விருதுக்கு 60 வயதுக்கு மேற்பட்டோரும், வவுனியம் முதுஇளவல் விருதுக்கு 40 தொடக்கம் 60 வயதுக்கு இடைப்பட்டோரும்,வவுனியம் கலைஇளவல் விருதுக்கு 40 வயதுக்கு கீழ்ப்பட்டோரும் விண்ணப்பிக்க முடியும்.

தகுதியானவர்கள் விண்ணப்பிக்கும் துறையை குறிப்பிட்டு அவரது கலை, பணி மற்றும் வரலாற்றுச் சுருக்கம் ஆகியவற்றை இணைத்து ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகம் வவுனியா என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களை வவுனியா பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ள முடியும். (ஐ-110)

# அச்சுறுத்தும் செயற்பாடுகளில் மீண்டும் இறங்குகிறதா அரசு?

### சுரேஷ் பிறேமச்சந்திரன் கேள்வி



**யாழ்ப்பாணம், ஒக்.16**

**வடக்கு, கிழக்கு பகுதிகளில் இலங்கை அரசு மீண்டும் விசாரணை என்ற பெயரில் அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இந்தச் சந்தேகத்தைப் போக்கும் வகையில் அரசு நடந்துகொள்ள வேண்டும்.**

இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயற்பாட்டாளரான ஐயாத்துரை குகன் இரண்டு மணி நேரத்துக்கு மேலாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். கிளிநொச்சி, இரணைமடு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த புலனாய்வுப் பிரிவினர் என்று கூறிக் கொண்டவர்களே விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

எந்தவித குற்றச்சாட்டும் இல்லாத ஒரு சூழலில், அவர் ஒரு ஜனநாயக ரீதியிலான அரசியல் கட்சியின் செயற்பாட்டாளர் என்று தெரிந்துகொண்டு அவரது சமூக சேவையை தடுத்து நிறுத்தும் வகையிலும் அவரை அச்சுறுத்தும் வகையிலும் புலனாய்வுப் பிரிவினர் நடந்துகொண்டது கண்டிக்கத்தக்கது.

இலங்கை அரசு இத்தகைய தான்தோன்றித்தனமான கண்டனத்துக்குரிய ஜனநாயக விரோத செயற்பாடுகளை உடன் நிறுத்தி மக்களின் இயல்பான வாழ்க்கைக்கு வழி சமைக்க வேண்டும் என்று நாம் கோருகின்றோம். இனியாவது சர்வதேசத்தின் நன்மதிப்பைப் பெறுவதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்வது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கும்- என்றுள்ளது. (எ-இ)

## பொருள் விலை அதிகரிப்பு அரசின் தவறில்லை

### அமைச்சர் காமினி கூறுகிறார்

பொருள்களின் விலைகள் அதிகரித்தமை அரசின் தவறல்ல. அரசை நாம் பொறுப்பேற்கும்போது நாட்டின் பொருளாதார வேகம் குறைந்திருந்தது.

இவ்வாறு அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வெளிநாட்டுக் கடன்களை செலுத்தியுள்ளோம். எங்களுடைய அரசு எப்படியாவது வெளிநாட்டுக் கடன்களை செலுத்தும். அமெரிக்க டொலரின் விலை அதிகரித்துள்ளதால் பால்மா, கோதுமை மா, எரிவாயு உள்ளிட்ட பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. அது அரசின் தவறல்ல.

இன்னும் சில நாள்களில் முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன. 300 மாணவர்களுக்கும் குறைவான பாடசாலைகளை எதிர்வரும் 21ஆம் திகதி திறப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். என்றார். (எ-இ)

*விவாதப் போட்டியில்*

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக்.16

தமிழ் பேசும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கிடையில் இணைய வழியில் நடத்தப்பட்ட விவாதப்போட்டியில், வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் விவாத அணி வெற்றி பெற்றுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியிலான தமிழ் பேசும் உறுப்பினர்களை மையமாகக் கொண்டு இணைய வழியில் விவாதப் போட்டி நடத்தப்பட்டது.


தொடர்ச்சியாக நடத்தப்பட்ட போட்டிகளில் காத்திரமாக தமது விவாதக்கருத்துக்கள் மூலம், வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை அணி மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை மேற்கு பிரதேச சபை அணி ஆகியன இறுதிப் போட்டியில் பங்குபற்றவுள்ளன.

இந்தப் போட்டியில் வலி.தென்மேற்குப் பிரதேச சபை விவாத அணியின் தலைவராக உறுப்பினர் க.ஜெசிதன், ஏனைய பேச்சாளர்களாக உறுப்பினர் அ.ஜோன் ஜிப்பிரிக்கோ, தவிசாளர் அ.ஜெபநேசன், உறுப்பினர் லோ.ரமணன், உறுப்பினர் சி.அனுசன் ஆகியோர் பங்குபற்றினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4,125)

# கட்டமைப்பின்றி வீதிப் புனரமைப்பு

### பிரதேச சபை போர்க்கொடி



யாழ்ப்பாணம்,ஒக்.16

எவ்வித கட்டமைப்புமின்றி, முறையற்ற விதத்தில் வீதி புனரமைக்கப்படுவதால், எதிர்காலத்தில் மக்களே வெள்ள இடரை எதிர்கொள்ள நேரிடும். எனவே சீரான முறையில் வீதிபுனரமைப்பை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிடில் மக்களையும் இணைத்து வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று வலி.தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

காரைநகர் - யாழ்ப்பாணம் வீதிப் புனரமைப்பு வேலைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. வெள்ள வாய்க்கால்களை மூடி வீதிப்புனரமைப்பு வேலைகள் இடம்பெறுகின்றன என்று மக்களால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக பிரதேச சபைத் தவிசாளர் ஜெபநேசன் தலைமையில், பிரதேச சபை உறுப்பினர்கள் நேரில் சென்று ஆராய்ந்தனர்.

இது தொடர்பில் தவிசாளர் தெரிவிக்கையில்,

வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர் குறிப்பிட்டதைப் போன்று, மத்திய வீதியில் இருந்து ஏழு மீற்றர் அகலிப்புக்களோடு வீதி அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற உறுதி மொழி அளிக்கப்பட்டிருந்தது.

இருந்த போதும் 5 மீற்றர் அகலித்தலில் வீதி புனரமைக்கப்படுகின்றது.

வீதி அபிவிருத்தி என்ற பெயரில் ஒவ்வொரு கட்டம் கட்டமாக வெவ்வேறு ஒப்பந்தகாரர்களுக்கு மானிப்பாய் வீதி புனரமைப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஒப்பந்தகாரரும் எந்தவித பாலக்கட்டுமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.


வாய்க்கால்களை முழுமையாக மூடி மறைத்து அதன் மீது பாதை போடுகின்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதனூடாக வெள்ள அனர்த்தம் ஏற்படலாம். வாய்க்கால்கள் இருந்த இடங்களில் எந்தவிதமான புனரமைப்புகளும் மேற்கொள்ளப்படவில்லை. முழுமையான கட்டமைப்புகள் மேற்கொள்ளப்படவில்லை.

இது தொடர்பாக எமக்கு விளக்கம் தர வேண்டும். இல்லாத சந்தர்ப்பத்தில் பொதுமக்களோடு பிரதேசசபை உறுப்பினர்களும் சேர்ந்து வீதி அபிவிருத்தியை முழுமைப் படுத்துவதற்கான ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்வோம் - என்றார். (ஒ-4,319)

# தீர்வு கிடைக்காவிடில் நாடு இருளில் மூழ்கும்

## மின்சார சபை எச்சரிக்கை



**கொழும்பு,ஒக்.16**

**இலங்கை மின்சாரத் துறை தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்காவிடில், தொழிற் சங்கப் போராட்டத்தை ஆரம்பிப்போம்**

இவ்வாறு இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டால், மின்வெட்டால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள் என்பதைக் கருத்திற் கொண்டே, வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கத் தாமதித்துள்ளோம். எனினும் விரைவில் வேலைநிறுத்தப் போராட்டம் தொடங்கப்படுமா என்று கூற முடியாது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஜெட் விமானம் தரையிறங்கியது அதில் வந்தவர்களுடன் நீங்கள் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டீர்களா? இதனை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.


அமைச்சரவை அமைச்சர்களுக்குத் தெரியாமல் அரசு அமெரிக்க அதிகாரியுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதனால், அமைச்சரவையில் இருந்தே அரசுக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. - என்றார். (ஒ-4)

## பணம் அச்சிடுவதற்கும் விலை அதிகரிப்புக்கும் தொடர்பேதுமில்லை

கொழும்பு, ஒக்.16

பணம் அச்சிடப்படுவதற்கும், அத்தியாவசியப் பொருள்கள் உள்ளிட்டவையின் விலை ஏற்றத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி, வெளிநாடுகளில் பொருள்களின் விலைகளில் ஏற்பட்ட மாற்றம் ஆகியனவே விலையேற்றத்துக்குக் காரணம். பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த வேண்டியுள்ளது. நாம் இந்த விடயம் குறித்து மிகுந்த அவதானத்துடன் முகாமைத்துவம் செய்கின்றோம். -என்றார். (ஒ-4)

## சீனியின் விலை மீண்டும் உயர்வு



கொழும்பு,ஒக்.16

சீனி உட்பட பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலை அசாதாரணமாக அதிகரித்துள்ளது என்று சில்லறை விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, ஒரு கிலோ கிராம் வெள்ளைச் சீனியின் மொத்த விலை 130 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் மொத்த விலை 150 ரூபா முதல் 160 ரூபா வரை உள்ளது மற்றும் ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் சில்லறை விலை 200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், மொத்த விலை 110 முதல் 115 ரூபா வரை இருந்தது. தற்போது அதன் சில்லறை விலை ஒரு கிலோ கிராம் 160 முதல் 180 ரூபா வரையும் உயர்ந்துள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-4)

## சலூன்களிலும் கட்டணங்கள் அதிகரிப்பு

சலூன்களில் முடிவெட்டுதல், முகச்சவரம் செய்தல் ஆகியவற்றுக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு உள்ளிட்ட ஏனைய நகரங்களிலுள்ள சலூன்களிலும் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக ஹற்றன் டிக்கோயா முடித்திருத்துவோர் சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், முடி வெட்டுவதற்காக 300 ரூபாவும், தாடி வெட்டுவதற்கு 200 ரூபாவும், சிறுவர்களுக்கு முடி வெட்டுவதற்கு 200 ரூபாவும், முடியை வெட்டி வர்ணம் பூசுவதற்கு 800 ரூபாவும், மசாஜ் செய்வதற்கு 200 ரூபாவும் என்ற கட்டண விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப்பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதை அடுத்து, வாழ்க்கைச் செலவும் அதிகரித்துள்ளது. இதனைத் தாங்கிக் கொள்வதற்காக சலூன்களிலும் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. (ஒ-4)

## பெறுமதியான சொத்துக்களை கொள்ளையிட வந்தாரா தளபதி?

### முன்னிலை சோசலிசக் கட்சி கேள்வி



கொழும்பு.ஒக்.16

அமெரிக்கா, சீனா, இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான போட்டியில், இலங்கை இலக்கு வைக்கப்பட்டுள்ளது என்று முன்னிலை சோசலிசக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ தெரிவிக்கையில், தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதாகக் கூறியே தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்தது. கடந்த அரசு வழங்கிய நாட்டின் சொத்துக்களை மீட்போம். நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்யப்போவதில்லை என்றும் கூறினர். எனினும் தற்போதைய அரசால் நாட்டின் சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. நாட்டின் மிகவும் பெறுமதி வாய்ந்த சொத்துக்கள், நாட்டின் பொருளாதாரத்துக்காக பலிகொடுக்கப்படுகின்றன.

இந்திய இராணுவப் பிரதானி இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். உலகின் பலமிக்க இராணுவத்தின் பிரதானியாக அவர் உள்ளார். போர்க்காலத்தில் கூட இவர்கள் இலங்கைக்கு வந்தது கிடையாது. பிராந்திய போரைப் பலப்படுத்தவே, இந்திய இராணுவப் பிரதானி நாட்டுக்கு வந்துள்ளார். பிராந்தியத்தில் உள்ள பெறுமதியான சொத்துக்களைக் கொள்ளையிடுவதற்காகவும் அவர் இங்கு வந்துள்ளார். - என்றார். (ஒ-4)

## சிறுபான்மை மக்கள் மீது வட்டபொத்தவில் தாக்குதல்

கொழும்பு, ஒக்.16

காஹவத்தை, வட்டபொத்த தோட்டத்தில் வசிக்கும் சிறுபான்மை மக்கள் மீது பெரும்பான்மையின மக்கள் தாக்குதல் நடத்தியதுடன், சொத்துகளுக்கும் சேதம் விளைவித்துள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் தாய் ஒருவர் உட்பட 3 இளைஞர்கள் காயமடைந்துள்ளனர் என்றும், தோட்டக்குடியிருப்பு ஒன்றும், நான்கு முச்சக்கர வண்டிகள் மற்றும் இரு மோட்டார் சைக்கிள் என்பன சேதமாக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

யடாகர கிராமத்தைச் சேர்ந்த பெரும்பான்மையினத்தை சேர்ந்த கும்பல் ஒன்றே தாக்குதல் நடத்தியுள்ளது என்று கூறப்படுகின்றது.

தாக்குதலுக்கு இலக்கான இளைஞர் ஒருவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியும் அந்தக் கும்பலால் அபகரிக்கப்பட்டுள்ளது என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் உப செயலாளர் சம்பவ இடத்துக்குச் சென்று ஆராய்ந்துள்ளார் இது தொடர்பில் பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)



வவுனியா செக்கடிப்புலவு அ.த.க பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையந்த மாணவர்கள் ஐவருக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன. தமிழ் விருட்சம் அமைப்பின் ஊடாக லண்டன் வாழ் து. இரட்ணசிங்கத்தால் இந்த உதவிகள் நேற்று வழங்கப்பட்டன. (ஜ-110)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இந்தியாவின் தாளத்துக்கு ஆடுதல்


இலங்கை அரசியலில் அண்மைக்காலமாக 13 ஆவது திருத்தம், மாகாணசபைத் தேர்தல் என்பன மீண்டும் பேசுபொருளாகிவிட்டன. ஒரு பிரச்சினையை மறைப்பதற்கு அதனை விடப் பெரிய பிரச்சினையை தோற்றம் பெற வைப்பது என்பது ஆட்சியாளர்களின் தந்திரம். ஆட்சியாளர்கள் மீதான சிங்கள – பௌத்த சமூகத்தின் விரோத மனநிலையைத் திசை திருப்ப 13 ஆவது திருத்தம் மீளக் கிளறப்பட்டுள்ளது. அதற்கு ஏற்றாற்போல் இந்திய வெளிவிவகாரச் செயலரின் இலங்கைப் பயணமும் அமைந்திருக்கின்றது.

13 ஆவது திருத்தச் சட்டத்தை தீர்வாக ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை அது நடைமுறைப்படுத்தப்பட்ட நாளிலிருந்து தமிழர் தரப்புக்கள் கூறிவருகின்றன. அதன் ஊடாக உருவாக்கப்பட்ட மாகாணசபை என்பது வலக்கையால் கொடுத்து இடக்கையால் பறிப்பதைப்போன்றது. இந்த மாகாணசபை முறைமை ஊடாக இணைந்த வடக்கு – கிழக்கை ஆட்சி செய்த மாகாண முதலமைச்சரோ, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் முதலாவது முதலமைச்சர்களோ, தமிழ் மக்களுக்குரிய தீர்வாக இதனை ஏற்க முடியும் என்று எங்கும் கூறவில்லை. மாறாக இணைந்த வடக்கு – கிழக்கை ஆட்சி செய்த முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தனித் தமிழீழத்தைப் பிரகடனப்படுத்திவிட்டு இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். கிழக்கு மாகாணத்தின் முதலாவது முதலமைச்சர் சந்திரகாந்தன் (பிள்ளையான்) "ஒரு பியோனைக்கூட நியமிக்கும் அதிகாரம் மாகாணசபைக்கு இல்லை" என்று வெதும்பியிருந்தார். வடக்கின் முதலாவது முதலமைச்சர் விக்னேஸ்வரனும், 13ஆவது திருத்தத்தை அதிகாரப் பகிர்வின் ஆரம்பப் புள்ளியாகக் கூட எடுத்துக் கொள்ள முடியாது என்பதை நிரூபித்திருந்தார்.

இவ்வாறானதோர் சூழலில், 13 ஆவது திருத்தத்துக்குள் தமிழர் தரப்பை முடக்குவதற்கான முயற்சிகளை இந்தியா முழு மூச்சாக எடுத்து வருகின்றது. இலங்கை அரசு 13ஆவது திருத்தத்தின் ஊடான மாகாணசபை முறைமையை ஒழிக்கப்போகின்றது என்று பூச்சாண்டி காட்டி வருகின்றது. அந்தத் திருத்தம் ஏற்படுவதற்கு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ஒரு தரப்பான இந்தியாவோ, தமிழர் தரப்பு மாகாணசபை முறைமை வேண்டும் என்று ஒரே குரலில் கேட்கவேண்டும் என்று கூறுகின்றது. இந்தப் பின்னணியில் கூட்டமைப்பிலிருந்து அண்மைக் காலமாக, மாகாணசபை முறைமை, மாகாணசபைத் தேர்தலுக்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் அதன் ஊடகப் பேச்சாளர் சுரேன் ஆகியோர் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தனர். "13ஆவது திருத்தத்தின் ஊடாக மாகாணசபையின் முழுமையான அதிகாரங்கள் வழங்கப்பட்டு அதன் பின்னரே மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும்" என்று அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். மாகாணசபைக்கு முழுமையான அதிகாரங்கள் வழங்கப்பட்டாலும், ஒற்றையாட்சி முறைமைக்குள் இருக்கும்வரையில் அந்த அதிகாரங்கள் எப்போது வேண்டுமானாலும் மத்தியால் மீளப் பெற்றுக் கொள்ளப்படும் என்பதைக் கூட அறியாமலா இவர்கள் இதனைக் கோருகின்றனர்? மாகாணசபை முறைமை நடைமுறையானதிலிருந்து எத்தனையோ தடவைகள் அதன் அதிகாரங்கள் கொழும்பு ஆட்சிப் பீடத்தால் பிடுங்கப்பட்டுள்ளன. அப்படியிருக்கையில் இப்போது அதிகாரங்கள் வழங்கப்பட்டாலும், மீளப் பறிக்கப்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

ஒற்றையாட்சி அரசமைப்புக்குள்ளே நின்று கொண்டு அதிகாரங்களைக் கோருவதால் பயனில்லை. தேர்தல் அறிக்கையில் குறிப்பிடுவதைப்போன்று கூட்டாட்சி (சமஷ்டி) முறையிலான அதிகாரப் பகிர்வையே கோர வேண்டும். இந்தியாவைத் திருப்திப்படுத்துவதற்காக ஒற்றையாட்சி முறைமைக்கு உட்பட்ட மாகாணசபையைத் தீர்வாகக் கோருவதை, அதனை நடைமுறைப்படுத்தக் கேட்பதை, மண்ணுக்காக மடிந்துபோன எந்தவொரு ஆன்மாவும் மன்னிக்காது.



# 11 இளைஞரைக் கடத்தியோருக்கு தண்டனை கிடைப்பது கட்டாயம்!

## வலியுறுத்துகிறார் பொன்சேகா

**கொழும்பு, ஒக்.16**

**கொலையாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் கட்டாயம் தண்டிக்கப்பட்டே தீரவேண்டும். கொழும்பில் 11 அப்பாவித் தமிழ்ப் பிள்ளைகளைக் கடத்திச் சென்று கப்பம் கோரி, அது கிடைக்காததால், அந்தப் பிள்ளைகள் கொலை செய்யப்பட்டிருந்தால், அதில் தொடர்புடையவர் இராணுவத் தளபதியல்ல எவராக இருந்தாலும் கட்டாயம் தண்டனை கிடைக்கவேண்டும்.**



இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் நலன் அறிய, அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள அங்குகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா நேற்று முன்தினம் சென்றிருந்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

11 இளைஞர்கள் கடத்தப்பட்டபோது வசந்த கரன்னாகொட கடற்படைத் தளபதியாக இருந்தார். நான் அந்தக்காலத்தில் இராணுவத்துக்குக் கட்டளைகளை வழங்கினாலும் இப்படியான அநியாயங்களைச் செய்ய அனுமதிக்கவில்லை.

கரன்னாகொடவுக்கு விடுதலை வழங்கப்பட்டாலும் வழக்கு திரும்பப் பெறப்பட்டாலும் தனிப்பட்ட ரீதியில் அதனை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன்.

படைத் தளபதியாக இருந்தாலும் வேறு ஒருவராக இருந்தாலும் கொலை செய்திருந்தால் குற்றம் செய்திருந்தால், அந்த நபருக்குக் கட்டாயம் தண்டனை வழங்கப்பட வேண்டும் - என்றார். (ஏ-22)

# ஆசிரியர்களுடன் மோதினால் ஆபத்து உங்களுக்கே

கொழும்பு, ஒக். 16

"ஆசிரியர் சமூகத்துடன் மோத வரவேண்டாம். அவ்வாறு மோதினால் அது உங்களுக்கே ஆபத்தாக அமையும்'' என்று, ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸா நாயக்கவுக்கு பதிலடி கொடுத்துள்ளது இலங்கை ஆசிரியர் சங்கம்.

"அதிபர், ஆசிரியர்களின் போராட்டத்தை எவ்வாறு நிறைவுக்கு கொண்டுவரவேண்டும் என்பது எனக்குத் தெரியும். அவர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டத்தை ஒடுக்கி தோற்கடித்து, பாடசாலைகளை மீளத் திறக்க வேண்டும்" என்று எஸ்.பி. திஸா நாயக்க அறிவிப்பு விடுத்திருந்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறியவை வருமாறு:

"எஸ்.பி. திஸா நாயக்க வாய்ச்சொல்லில் மட்டுமே வீரர். உளறுபவர். அந்த வாயால் தான் சிறைத்தண்டனையைக் கூட அனுபவித்தார். தனக்கு எதாவது பதவியை பெற்றுக்கொள்ளவே இவ்வாறெல்லாம் அறிவிப்பு விடுத்துவருகின்றார்.

தனக்கு நேர்ந்த நிலை என்னவென்பதை கண்ணாடி முன்பாக நின்று அவர் பார்க்க வேண்டும். ஏற்கனவே நொந்துபோயுள்ள அவரை, ஆசிரியர்களுடன் மோத வரவேண்டாம் எனக் கூறிவைக்க விரும்புகின்றேன். அது அவருக்கே ஆபத்தாக அமையும் - " என்றார். (த-44)




## உரும்பிராயில் வாள்வெட்டு நேற்றிரவு இருவர் காயம்

### பதிலுக்கு வீட்டுப் பொருள்கள் அடித்து உடைப்பு



**யாழ்ப்பாணம், ஒக். 16**

**உரும்பிராயில் நேற்று இரவு இருவருக்கு வாள்** வெட்டு நடத்தப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, வாள் வெட்டு நடத்தினார் என்று கூறப்படும் நபரின் வீட்டுக்குள் புகுந்த சுமார் 20 பேர்வரையான கிராம மக்கள், வீட்டிலிருந்த பொருள்களை அடித்து உடைத்துள்ளனர் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

நேற்றுமாலை 5.30 அளவில் கோவிலுக்குச் சென்று கொண்டிருந்த இளைஞனை வழிமறித்து வாள் வெட்டு நடத்தப்பட்டுள்ளது.

பின்னர், வாள்வெட்டுக்கு இலக்கான நபரின் உறவினர் மீதும் வாள்வெட்டு நடத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரித்துவிட்டு எவரையும் கைதுசெய்யாது சென்றுவிட்டனர்.

அதன்பின்னரே, கிராம மக்கள் சுமார் 20 பேர்வரையில் ஒன்றுசேர்ந்து வாள்வெட்டு நடத்தினார் என்று கூறப்படும் நபரின் வீடு புகுந்து பொருள்களை அடித்து உடைத்துள்ளனர் என்று குற்றம்சாட்டப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

(த-10)

## மன்னாரில் 31,339 ஏக்கரில் நெற்செய்கை



மன்னார், ஒக். 16

மன்னார் மாவட்டத்தில் இந்த வருடம் கால போகத்தில் 31 ஆயிரத்து 339 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான பெரும்போக பயிர்ச் செய்கை தொடர்பான விசேட கூட்டம், உயிலங்குளத்தில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் பிரதேச செயலாளர்கள், உரிய திணைக்கள அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

குறித்த கூட்டத்தில் பெரும்போக பயிர்ச் செய்கை தொடர்பாக பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. தற்போது கட்டுக்கரைக் குளத்தில் 7 அடி 8 அங்குலம் நீர் காணப்படுகின்றது. சிறிய குளங்களும் நிரம்பியுள்ளன.

அதன் அடிப்படையில் முதலாவது நீர் விநியோகத்தை எதிர்வரும் 26 ஆம் திகதியும், எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28 திகதியும் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை கால்நடைகளை புல்லறுத்தான் கண்டல், தெருவெளி, தேத்தாவடி போன்ற இடங்களில் பட்டி அடைத்து பராமரிக்கும்படி கால்நடைப் பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அத்துடன் இயற்கைப் பசளையின் மூலம் பயிர்ச் செய்கையை முன்னெடுக்க வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கப்பட்டது.

சுமார் 60 வருடங்களின் பின்னர் முதல் முதலாக இயற்கைப் பசளை மூலம் விவசாயச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இது ஒரு சவாலாக அமையும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

பசளையைப் பெற்றுக் கொள்ள வங்கிக் கடன் வசதிகளைப் பெற்றுத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். ஏனைய மாவட்டங்களில் அதற்கான நடவடிக்கை முன்னெடுக்கும் பட்சத்தில், மன்னார் மாவட்டத்திலும் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாவட்டச் செயலர் பதிலளித்தார்.

(ஒ-4-56)

## இன்றைய நாள்

**மேடம்:** குழந்தைகளின் கல்வி விஷயத்துக்காக செலவுகள் சற்றுக் கூடும். உடல் ஆரோக்கியத்தில் இருந்த பிரச் சினைகள் முடிவுக்கு வரும். வேலையில் கவனமும் விழிப்புணர்வும் அவசியம் தேவை.

**இடபம்:** மனதில் உற்சாகம் ஏற்படுத்தும் செயல் ஒன்று நடைபெறும். குழந்தை களின் எதிர்காலம் பற்றிய நற்செய்தி ஒன்று உண்டு. பண விஷயத்தில் கவனம் தேவை. நோய்கள் நீங்கும்.

**மிதுனம்:** எதிரி ஒருவரால் இருந்த மறைமுகத் தொந்தரவு முடிவுக்கு வரும். உறவினர்களிடம் கவனம் தேவை. பேச்சில் நிதானம் அவசியம். முகத்தில் பொலிவு கூடும்.

**கடகம்:** யாருக்கும் கையெழுத்துப் போட்டு பணம் வாங்கிக் கொடுக்காதீர். சுறுசுறுப்பும் உற்சாகமும் அதிகரிக் கும். பணிகள் விரைந்து முடியும். நகை போன்றவற்றை கவனமாக வைத்துக்கொள்வது நல்லது.

**சிம்மம்:** பெரிய அளவில் முதலீடு செய்ய வேண்டாம். நிம்மதியான நாள். குடும்ப ரகசியங்களை வெளியில் சொல்ல வேண்டாம். மூன்றாவது நபர்களிடம் பேசும் போது கவனம் தேவை.

**கன்னி:** இளம் வயதினருக்கு மகிழ்ச்சி யான சம்பவங்கள் நடைபெறும். செலவு அதிகமாக இருந்தாலும் வரவும் அதி கரித்து நிம்மதி தரும். உணவு விஷ யத்தில் கவனமாக இருக்கவும்.

**துலாம்:** நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரும். பணியாளர்கள் உயரதிகாரிகளிடம் பேசும் போது கவனம் தேவை. குடும்பச்சுமை குறை யும். செலவு சற்றே அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** பொருளாதார பிரச்சினை அகல நண்பர்கள் வழிகாட்டுவர். குடும்பத்தினருடன் கலகலப்பாகப் பேசி மகிழ்வீர்கள். விலை உயர்ந்த பொருளை வாங்குவீர்கள்.

**தனுசு:** கற்பனைப் பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டு கவலைப்பட வேண்டாம். மனதுக்கு நெருங்கியவர்க ளின் ஒத்துழைப்புக் கிடைத்து மகிழும் நாள்.

**மகரம்:** உங்கள் நலம் விரும்புவோரைப் பகைத்துக்கொள்ளாதீர்கள். புதிய வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள். காணாமல் போன பொருள் கைக்கு வரும்.

**கும்பம்:** உறவினர்கள் இடையே ஒற் றுமை பலப்படும். மகிழ்ச்சி கூடும். நண் பர்கள் சந்திப்பு திடீரென்று நிகழ்ந்து உற்சாகம் கூடும்.

**மீனம்:** வழக்கமாகச் செய்யும் பணியை இன்றுமாற்றிஅமைப்பீர்கள். எப்போதோ எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். மகிழ்ச்சி யான சம்பவமொன்று நடைபெறும். சமூகத்தில் மதிப்பு மரியாதை உயரும்.



படங்கள்: ஐ.சிவசாந்தன்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் விஜயதசமி மானம்பு உற்சவம் நேற்றுக் காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நல்லூரின் பண்டைய காலத்தில் உபயோகிக்கப்பட்ட பழைமையான சிறிய குதிரை வாகனத்தில் முருகப்பெருமான் எழுந்தருளி வர அமைதியான முறையில் மானம்பு உற்சவம் சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

# மாகாண சபை முறைமையை எதிர்த்தோர் இப்போது எங்கே?

## விமல், கம்மன்பில, வீரசேகரவை தேடுகின்றது எதிர்க்கட்சி

**கொழும்பு, ஒக்.16**

**மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாது, மாகாண சபை முறைமை ஒழிக்கப்படும் என்றெல்லாம் அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, சரத்வீரசேகர ஆகியோர் கூளுரைத்தனர். இப்போது இந் தியாவின் அழுத்தத்தால் அரசு தேர்தலை நடத்தத் தயாராகின்றது. இது தொடர்பில் அமைச்சர்கள் மூவரினதும் நிலைப்பாடு என்ன?**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி யின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண கேள்வி எழுப்பியுள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மாகாண சபை முறைமை எமது நாட்டுக்கு பொருத்தமற்றது. அந்த முறைமையை ஒழிக்க வேண்டும். புதிய அரசமைப்பு ஊடாக இது நடக்கும் என அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன் பில, சரத்வீரசேகர ஆகியோர் கூறி வந்தனர்.

ஆனால் இந்தியாவின் இராஜதந் திரிகள் வந்துசென்ற நிலையில், அவசர அவசரமாகத் தேர்தலை நடத்துவதற்கு அரசு தயாராகின் றது. ஆரம்பத்தில் எதிர்ப்பு வெளி யிட்ட அமைச்சர்கள் மௌனம் காக்கின்றனர். இது தொடர்பில் அவர்களின் நிலைப்பாடு என்ன? தேர்தல் நடைபெறுவதை நாம் எதிர்க்கவில்லை.

ஆனால் பிற நாடுகளின் அழுத் தத்தால் தேர்தல் நடைபெறுவதை யும், உள்ளக விடயங்கள் மாற்றப் படுவதையும் நாம் விரும்பவில்லை. சர்வதேச அழுத்தங்களுக்கு இந்த அரசுதான் வழிவகுத்துள்ளது. என் றார். (எ-44)

# கப்டன் இல்லாத கப்பலாக தத்தளிக்கின்றது இலங்கை

## த.மு.கூ தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு. ஒக். 16

ஆட்சியாளர்களின் முட்டாள்தன மான கொள்கைகளால், இந்த நாடு கப்டன் இல்லாத கப்பலாக நடுக்கட லில் மிதந்து கொண்டிருக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் விலைவாசியால் விழி பிதுங் குகின்றனர். இதற்கு இந்த அரசின் ஒரே பதில் உலகம் முழுக்க பரவி யுள்ள கொரோனா. கொரோனா உலகம் முழுக்க இருக்கின்றது. அங்கெல்லாம் பொருளாதாரம் இப் படி அழியவில்லை. விலைவாசி இப்படி நூறு மடங்கு உயரவில்லை. மக்களின் வருமானம் உடைந்து விழவில்லை.

தெற்காசிய நாடுகள் எப்படி எங்க ளுக்கு கடன் தரும் நிலையில் தங் கள் பொருளாதாரத்தை தக்க வைத் துள்ளார்கள் என்று கேட்க விரும்பு கிறேன்?.

வெளியில் இருந்து கொரோனா வந்து எம்மை அழிக்க முடியாத நாடாக இது இருந்தது. நீங்கள்தான் கொரோனாவை அழைத்து வந்தீர் கள். நாட்டைத் திறந்து வைத்தீர்கள். இன்று இறந்து போயுள்ள பத்தாயி ரத்துக்கு மேற்பட்டோரின் சாவுக்கும் காரணம் நீங்கள்தான். இந்த நிலை யில் விலைவாசி உயர்வுக்கு, கொரோ னாவை காரணம் காட்ட உங்க ளுக்கு எந்தவித யோக்கியதை இல்லை. உங்களுக்கு நா ஆளும் திறன் இல்லை. ஆ நாட்டை ஆளத் தெரிந்தவர் ஒப்படைத்து விட்டு வெளியேறு -என்றார்.

# இரசாயன உரத்தை வழங்கக்கோரி கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி,ஒக்.16

இரசாயன உரத்தை வழங்கக்கோரி இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனம் மற்றும் விவசாயிகள் இணைந்து கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.



ஆர்ப்பாட்டம் தொடர்பில் இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளனச் செயலர் முத்து சிவமோகன் கருத்துத் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் 2021 ஆம் ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கையானது சுமார் 71 ஏக்கர் பரப்பளவில் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் இயற்கை உரமானது விவசாயிகளின் 10 வீதத் தைக் கூட பூர்த்தி செய்யப் போதுமானதாக மாவட்டத்தில் கிடைப்பதில்லை.

100 வீத சேதனப் பயிர்ச் செய்கைத் திட்டமானது குறைந்தது ஐந்து ஆண்டுகள் திட்டமாகவேனும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். அதுவே நடைமுறைக்குச் சாத்தியமானது.

மாறாக மூன்று நான்கு மாதங்களில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முனைவது என்பது 80 வீதம் நடைமுறைச் சாத்தியமற்றதாகவே காணப்படும். எனவே இதனால் விவசாயிகள் முழுமையான அறுவடையை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படும். இது நாட்டில் உற்பத்தி பெருக்கத்தைக் குறைத்து பஞ்சத்தை ஏற்படுத்த வழிவகுக்கும்.

எனவே ஜனாதிபதி சேதன உரப் பயன்பாட்டுத் திட்டத்தை விவசாயிகளின் நலன்கருதி மீளப்பரிசீலனைக்குட்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

இது தொடர்பில் விவசாயிகளால் மகஜர் ஒன்றும் கிளிநொச்சி மாவட்ட மேலதிகசெயலர் ஸ்ரீமோகனிடம் கையளிக்கப்பட்டது. (ஐ-214,113)



# பரந்தனில் இராணுவ உபகரணங்கள் மீட்பு

கிளிநொச்சி,ஒக்.16

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரந்தன் கோரக்கன்கட்டு முன்பள்ளி வீதியில் இருந்து இராணுவப் பயன்பாட்டுப் பொருள்கள் மற்றும் மிதிவெடிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

பொதுமக்களால் பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து குறித்த இடத்திலிருந்து மேற்படி பொருள்களை படையினர் மீட்டுள்ளனர்.

இதில் இராணுவத்தினரின் சீருடை, நான்கு மிதிவெடிகள், உடைந்த தலைக்கவசம், குண்டு துளைக்காத கவசம் 1, இராணுவத்தினரின் காலணிகள் மற்றும் தண்ணீர்ப் போத்தல் ஆகிய பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார், குறித்த வெடி பொருள்களை நீதிமன்றின் அனுமதி பெற்ற பின்னர் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர். (ஐ-214,6)

# முன்பள்ளி திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 16

பிரான்பற்று ஸ்ரீமுருகன் முன்பள்ளியின் திறப்பு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வலி. தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன், செயலாளர் யசோதா உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செ. ரமேஷ், பண்டத்தரிப்பு சமுர்த்தி முகாமையாளர் இ. கமலக்கண்ணன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக பண்டத்தரிப்பு பொது சுகா தாரப் பரிசோதகர் இ .பிரகலாதனும் ,பண்டத்தரிப்பு கிராம அலுவலர் செ.பிரதீபனும், பிரான்பற்று கிராம அலுவலர் எஸ். சங்கர்ராஜ் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ-ரிரி)

# பஸ்ஸுக்குள் ஏறி அடாவடி; பொலிஸாரிடம் முறைப்பாடு

*சாவகச்சேரியில் சம்பவம்*

சாவகச்சேரி, ஒக்.16

இ.போ.ச. பஸ்ஸில் ஏறிய இருவர் நடத்துநரையும், பயணிகளையும் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை சாவகச்சேரியில் இருந்து கனகம்புளியடி ஊடாக சங்கானை செல்லும் 775 தட பஸ்ஸில் நடந்துள்ளது.

சாவகச்சேரியில் இருந்து புறப்பட்ட பஸ்ஸை, கெருடாவில் சந்தியில் மறித்து ஒருவர் ஏறியுள்ளார். அப்போது மோட்டார் சைக்கிளில் துரத்தி வந்த இருவர் பஸ்ஸில் ஏறி, அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். அதையடுத்து கனகம்புளியடிச் சந்தியில் பஸ்ஸை நிறுத்திய சாரதியும், நடத்துநரும் அந்த மூவரையும் பஸ்ஸில் இருந்து இறங்குமாறு கூறியுள்ளனர். பஸ்ஸில் இருந்த பயணிகளும் அந்த மூவரையும் இறங்கிச் செல்லுமாறு வலியுறுத்தியுள்ளனர்.

அதையடுத்து தாக்குதல் நடத்திய இருவரும் நடத்துநரையும், சக பயணிகளையும் தாக்கியுள்ளனர். இது தொடர்பில் படையினருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, இருவரும் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். அதன் பின்னர் படையினரின் உதவியுடன் பஸ் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதுடன், இந்தச் சம்பவம் தொடர்பாக முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது. (எ-9,131)

*தென்மராட்சியில்*

# 87 ஆசிரியர்கள் இன்னும் தடுப்பூசி பெறவில்லை

சாவகச்சேரி ஒக். 16

பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், தென்மராட்சி கல்வி வலயத்தில் 87 ஆசிரியர்கள் இதுவரை கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

தென்மராட்சி கல்வி வலயத்தில் உள்ள 54 பாடசாலைகளில் ஆயிரத்து 98 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். இவர்களில் 87 ஆசிரியர்கள் இன்னமும் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளவில்லை.

இந்தநிலையில் ஆசிரியர்களால் பிள்ளைகளுக்கு தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதனால் பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்புவதற்கு பெற்றோர் தயக்கம் காட்டுகின்றனர்.

இது தொடர்பாக தென்மராட்சி கல்விப் பணிப்பாளர் தெரிவிக்கையில், தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாத ஆசிரியர்களை இனங்கண்டு, தடுப்பூசி ஏற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (ஒ-49)

# சனசமூக நிலையங்களுக்கு தலா 10,000 ரூபா நிதியுதவி

சாவகச்சேரி,ஒக்.16

சாவகச்சேரி நகர சபையால், 24 சனசமூக நிலையங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறப்பாக இயங்கும் சனசமூக நிலையங்களுக்கு அரசால் வருடாந்தம் மானியமாக தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த நிதியில் பத்திரிகைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது என்று சனசமூக நிலையங்கள் அறிவித்திருந்தன.


அதற்கமைவாக இந்த வருடத்துக்கான உத்தேச வரவு செலவுத் திட்டம் நகர சபையால் தயாரிக்கப்படும் போது, சனசமூக நிலையங்களின் மேம்பாட்டுக்கென சபை நிதியிலிருந்து தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட வேண்டும் என்று சபையால் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டு, நிதி ஒதுக்கப்பட்டது.

சபையின் தீர்மானம் ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பப்பட்டு அவர் அனுமதி வழங்கியுள்ளார் என்று மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நகர சபைக்கு அறிவித்துள்ளார். (ஒ-4-9)

# மக்களது காணிக்கு எல்லையிட முயற்சி

வவுனியா,ஒக்.16

வவுனியா நாம்பன்குளத்தில் வனவளத்திணைக்களத்தினர் மக்களின் காணிகளுக்குள் எல்லையிட முயற்சித்த நிலையில், அதனை மக்கள் ஒன்று திரண்டு தடுத்து நிறுத்தினர்.



நாம்பன்குளத்தில் 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மக்கள் தமது காணிகளைக் கைவிட்டுச் சென்றுள்ளனர்.

2013 ஆம் ஆண்டு மீண்டும் தமது காணிகளுக்கு அனுமதிப்பத்திரம் கோரி, பிரதேச செயலகத்தில் விண்ணப்பித்திருந்தனர். இந்த நிலையில் அங்கு கிரவல் அகழ்வதற்கு சிலரால் அனுமதி கோரப்பட்டு, பிரதேச செயலகத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது வனவளத்திணைக்களம் குறித்த காணிகள் தமக்கு உரியவை என்று கோரி அவற்றுக்கு எல்லையிடுவதற்காக எல்லைக்கற்களை எடுத்துச் சென்றுள்ளனர்.

அதனையறிந்த அந்தப் பகுதியைச் சேர்ந்த சிலர் ஒன்று திரண்டு எல்லையிடுவதைத் தடுத்து நிறுத்தினர்.

இதனால் வனவளத்திணைக்களத்தினர் அங்கிருந்து சென்றனர். எதிர்வரும் 21 ஆம் திகதி பிரதேச செயலரை, மக்கள் சந்தித்த பின்னர், மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்று வனவளத்திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ஓ-4-110)

# Faculty of Medicine, University of Jaffna

## Vacancy

## Post of Temporary Demonstrator

Interview for the above post will be held on 01.11.2021 at 11.00 am via online at the Board Room, Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil.

Applications are entertained from those who have passed the final examination of the MBBS or BSc degrees obtained in Allied Health Sciences from the State Universities or UGC recognized foreign Universities.

Salary Scale: Rs 40,920.00 (Fixed)

Interested candidates with the required qualifications are requested to send scanned copies of the relevant certificates along with the duly filled application in the prescribed application form.

The applications and scanned copies should reach, the following email address on or before 25.10.2021:
**E-mail address :deanmedicine@univ.jfn.ac.lk**

Application forms and other details are available in the Faculty of MedicineWebsite link:http://www.med.jfn.ac.lk/ wp-content/uploads /2021/01/APPLICATION-Form.pdf

Applicants are requested to send the prescribed application form downloaded from the website with the paid Bank slip for the deposit / Cash deposit Machine receipts(CDM) of a sum of Rs.100.00 credited to the people's Bank Account no. (Ref No): 970000090000387 of Bursar University of Jaffna.

Note: **The zoom link for the interview will be sent only to the shortlisted candidates.**

Registrar
University of Jaffna
*15.10.2021*

## மரண அறிவித்தல்



### நாகன் தம்பிராசா

யாழ்ப்பாணம் மடம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகன் தம்பிராசா அவர்கள் (14.10.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15. 10.2021) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் யாழ். கொட்டடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. (நேற்றைய இந்த விளம்பரத்தில் பூதவுடல் யாழ். சாட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என தவறுதலாக பிரசுரமாகியது)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 16 . 09 . 1962



இறைவன் அடியில் 12 . 10 . 2021

### திருமதி சாந்தினி சிவானந்தன்

யாழ். கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வவுனியா வைரவப்புளியங்குளத்தை நிரந்தர வசிப்பிடமாகவும், இந்தியா டில்லியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தினி சிவானந்தன் அவர்கள் கடந்த (12.10.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், நடராசா சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவானந்தன் அவர்களின் பாசமிகு மனைவியும், ஜெனிக்கா (பிரித்தானியா), தட்சனா (பிரான்ஸ்), சனார்த்தனன் (கனடா), லவப்பிரியா (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜயகாந்தன் (பிரித்தானியா), கேதீஸ்வரன் (பிரான்ஸ்), எழிழரசி (வவுனியா), தர்சன் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஆர்த்திக், பைரவி, ஆரா, ஆனந்த்வேலன், ஆருத், கௌதம், கௌரவ்,நந்தனா ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், இராஜேஸ்வரி (ஜேர்மனி), இரஞ்சிதமலர் (கனடா), தயாநிதி (இலங்கை), இராஜேசினி (சுவிஸ்), கதிர்காமநாதன் (கனடா), காலஞ்சென்ற சிவநேசன் (இலங்கை), காலஞ்சென்ற மகேசன் (ஜெர்மனி) மற்றும் தர்சிகா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (17.10.2021) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
**சகோதரி தயாநிதி (ஜெயக்குமார்)**

**பழனியாண்டவர் கோவிலடி, கோண்டாவில் கிழக்கு.**

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 29 . 03 . 1949



இறப்பு 09 . 10 . 2019

### கந்தையா புவனேஸ்வரி

அன்பின் பிறப்பிடமாய்...
பாசத்தின் ஜோதியாய்...
நேசத்தின் ஒளியாய்...
திகழ்ந்த எம் குலவிளக்கே... !

மறவா நினைவுகளை மனதோடு தந்துவிட்டு,
இறையோடு சென்று இன்று இரண்டு ஆண்டுகள்
. வார்த்தைகளால் சொல்ல முடியாத வலிகள்
உங்கள் இழப்பு !

உதிர்ந்து நீங்கள் போனாலும்
உருக்கும் உன் நினைவுகள் - எங்கள்
உள்ளத்தில் என்றென்றும்
உறைந்திருக்கும் !!

கடலில் தோன்றும் அலைகள் யாவும்
கரையைச் சேர்வதைப்போல
உங்கள் எண்ண அலைகள் யாவும்
எங்களுடனேயே வாழ்கின்றன...

**உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்...!!!**

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 06 . 1947



இறப்பு 15 . 10 . 2021

### திருமதி அகஸ்ரின் உத்தரியம் (நேசமலர்)


மெலிஞ்சிமுனையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பிரதான வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அகஸ்ரின் உத்தரியம் (நேசமலர்) நேற்று (15.10.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்ரியான் - எலிசம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பிரகாசம் - கித்தோரி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பிரகாசம் அகஸ்ரின் (துரைசிங்கம்) அவரின் அன்பு மனைவியும், கயோசின், நீதி, சூசைநாதன், விமலநாதன், காமலீற்றா, ஜெகநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகராஜா, ஜெயமணி, ரமா, றொபின்சன், செறின், நீசலின் ஆகியோரின் அன்பு மாமியும், லிடியா, யோயல், சிந்தி, செலின், சரியா, மரியா, கற்லீன், கஜோலின், செறியோன், நோயல், நியோல், ஆறோன், அயோன், ஜேசேன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான லில்லி, யுஸ்தீன்னம்மா மற்றும் ஜேன்பிள்ளை, ராணி, சகாயன், ஜசிந்தா ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை, மகராசம்பிள்ளை, திருச்செல்வம் மற்றும் ஜெயா, அற்புதராணி, யோசுதாசன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (16.10.2021) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து மெலிஞ்சிமுனை பரலோகராசா ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு அடக்கஸ்தலையில் அன்னாரின் திருவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 830 8436**

# மரண அறிவித்தல்



## திரு. சபாரட்ணம்
## அருள்சுப்பிரமணியம்

(முன்னாள் மாதகல் சென் ஜோசப் மகாவித்தியாலய அதிபர், கொத்தணி பாடசாலை அதிபர், கனடா தமிழ் பூங்கா பாடசாலை நிறுவுனர், ஆலோசகர், இன்றைய தொல்காப்பிய மன்ற தலைவர், ஆலோசகர், மக்கள் வாழ உதவும் நிறுவகம், பாதுகாவலர், சுனாமி சிறுவர் உதவி நிலையம். (17ஆண்டுகள்)

**மண்ணில்** 1944 -02-17 **விண்ணில்** 2021-10-10

அமரர் திரு. சபாரட்ணம் அருள் சுப்பிரமணியம் அவர்கள் கடந்த 10.10.2021 (ஞாயிற்றுக்கிழமை) கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாதகலைச் சேர்ந்த திரு திருமதி சபாரட்ணம் தங்கம் தம்பதியினரின் பேரன்பு மிக்க மூத்த புதல்வரும் தனராஜின் இன்னுயிர் அண்ணாவும் காலஞ்சென்ற பொன்னாலையைச் சேர்ந்த வாமதேவர் மங்கையர்க்கரசியின் வாஞ்சை மிக்க மருமகனும் யோகசக்தி (யோகா) யின் அன்புக் கணவரும், அசோக், அருண், பாபுஜி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அகல்யா, பெயித் அருணா, நிவேதிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கோப் இசை, அரண், மைக்கா கீதன், ஆரதி, அமயா நிலா, சோயி சகானா, மிக்கேலா நீரா, கேடன் நவீன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் chapel funeral home 8911woodbine avenue markharm ON - இன்று (16.10.2021) சனிக்கிழமை பார்வைக்கு 6pm-9pm EST நாளை (17.10.2021) ஞாயிற்றுக்கிழமை பார்வைக்கு 7am-9.30am EST இதனைத்தொடர்ந்து இறுதிக்கிரியைகள் இடம்பெறும் என்பதனை உற்றார் உறவினர்அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.


**தகவல்**

**தம்பி தனராஜ் குடும்பம்.**

**தொடர்புகளுக்கு**

**மனைவி யோகா 647 706 6123, மகன் அசோக் 416 999 7193**
**மகன் அருண் 647 281 0306, மகன் பாபுஜி 416 931 5570**
**தம்பி தனராஜ் யாழ்ப்பாணம் பிறவுண் வீதி,**
**021 222 5318, 077 233 6238**

# கண்ணீர் அஞ்சலி



"மாமனிதர்"

மாதகல் பகலவன் கவிஞர் அமரர்

## சபாரட்ணம் அருள்சுப்பிரமணியம்

(முன்னாள் மாதகல் சென்ஜோசப் மகாவித்தியாலய அதிபர், கொத்தணிப்பாடசாலை அதிபர், கனடா தமிழ்ப்பூங்காப் பாடசாலை நிறுவுநர், ஆலோசகர் இன்றை தொல்காப்பிய மன்றம், சுனாமி சிறுவர் உதவி நிலைய பாதுகாவலர் (17 ஆண்டுகள்), ஆலோசகர்– மக்கள் வாழ உதவும் நிறுவகம்) பிரான்ஸ், சுவிஸ் மாதகல் நலன்புரிச்சங்கத்தினை ஆரம்பிக்க வைத்தவர்,,

"மாதகல் மான்மியம்" என்ற நூலின் ஆசிரியர்

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

தோற்றம்: 1944 -02-17

மறைவு : 2021-10-10

பிரிவால் பகிரும்
மக்கள் வாழ உதவும் நிறுவகம்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் சின்னத்தம்பி சுப்பிரமணியம்

மலர்வு 03.08.1943

உதிர்வு 16.09.2021

கடந்த (16.09.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (16.10.2021) சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


எமது துயரில் கலந்து கொண்டு தொலைபேசி ஊடாகவும், நேரில் வந்தும் ஆறுதல் கூறியவர்களுக்கும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
**கைதடி கிழக்கு,**
**கைதடி.**

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் சண்முகநாதன்

**இலங்கை நீர்பாசன இலாகாவின் முன்னாள் தொழில்நுட்பவியலாளர், கொக்குவில் இந்துக் கல்லூரி கனடா பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவர், கனடா ஐயப்பன் குருசாமி (சண்சாமி)**



தோற்றம் 22.03.1950

மறைவு 12.10.2021

யாழ். கொக்குவில் பிரம்படியைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சண்முகநாதன் அவர்கள் கடந்த 12-10-2021 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-நாகரத்தினம் தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-இராசமலர் தம்பதிகளின் மருமகனும், ரஜனா அவர்களின் அன்புக் கணவரும், சதீஸ்கர், பிரதீஸ்கர், லதீஸ்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுஜாதா, ஸ்ரீமைதிலி, கௌதமி ஆகியோரின் அன்பு மாமனாரும், பார்வதி, லக்ஸ்மன், அர்ஜுன், விக்ரம், மாயன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற மங்கையர்க்கரசி, பரமேஸ்வரி (கனடா), இராஜேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற மங்களேஸ்வரி, சர்வேஸ்வரி (கொக்குவில்), காலஞ்சென்ற திருச்செல்வம், சற்குணநாதன் (லண்டன்), காலஞ் சென்ற சத்தியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஞானேந்திரன் (நீர்வேலி), குகனேந்திரன் (கனடா), சர்வேந்திரன் (நோர்வே), சிவேந்திரன் (ஜேர்மனி), இரத்தினேந்திரன் (கனடா மொன்றியல்), சேலினா (ஜேர்மனி), சுஜேந்திரன் (பிரான்ஸ்), நிமலேந்திரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

பார்வைக்கு : Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1, Canada.
16 Oct 2021, Saturday 2:00 PM - 5:00 PM,
17 Oct 2021, Sunday 10:00 AM - 1:00 PM,
18 Oct 2021, Monday 11:00 AM - 11:30 AM

கிரியை : Monday, 18 Oct 2021 11:30 AM - 1:30 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

தகனம் : கிரியையினைத் தொடர்ந்து இலங்கை நேரம் பிற்பகல் 2.00 மணிக்கு அதே இடத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
சதீஸ்கர் - மகன் : +16479753962,
பிரதீஸ்கர் - மகன் : +16472425602,
லதீஸ்கர் : +14372473935
சர்வேஸ்வரி : + 94 777 073 580,
ஞானேந்திரன் : + 94779003195

**தகவல்: குடும்பத்தினர்**

## 21ஆம் திகதி ....

மானிக்கப்பட்டது.

எதிர்வரும் 19 மற்றும் 20ஆம் திகதிகள் விடுமுறை தினங்களாக அமையப்பெற்றுள்ளன. நீண்ட விடுமுறையுடன் கூடிய வார இறுதி அமையப்பெறவுள்ளமையால், அனைத்து மாகாண எல்லைகளிலும் போக்குவரத்து நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளைத் தீவிரமாக முன்னெடுக்குமாறு, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பாதுகாப்புத் துறையினருக்குப் பணிப்புரை விடுத்தார். நேற்றுமுற்பகல், வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக நடைபெற்ற கொரோனா ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தின் போதே, ஜனாதிபதி மேற்கண்ட பணிப்புரையை விடுத்தார்.

இதேவேளை, கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களான 18 - 19 வயதுக்கு இடைப்பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கைகள், நேற்றுத் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

அத்துடன், ஏனைய மாவட்டங்களிலுள்ள மேற்படி வயதுப் பிரிவைச் சேர்ந்த அனைத்துப் பிள்ளைகளுக்கும், இந்தமாதம் 21ஆம் திகதி தொடக்கம் பாடசாலைகள் மற்றும் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்கள் ஊடாகத் தடுப்பூசி ஏற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுகாதாரத் துறையினரின் பரிந்துரைகளுக்கு அமைவாக, பாடசாலை மாணவர்களுக்கு ஒரு டோஸ் தடுப்பூசியும் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு இரண்டு டோஸ் தடுப்பூசிகளும் செலுத்தப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசிகள் செலுத்தப்பட்ட பின்னர், சுகாதாரப் பரிந்துரைகளுக்கமைய, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்கான மூன்றாவது டோஸ் தடுப்பூச்சியைச் செலுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமையன்று, மேலும் 6 இலட்சம் பைசர் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறவுள்ளன.

கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையை மேலும் குறைத்துக் கொள்வதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட வேண்டும். தொற்றுக்கு இலக்காகும் நோயாளிகள் தற்போது கண்டறியப்படும் பிரதேசங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி, அந்த இடங்களைத் தனிமைப்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

கொரோனா ஒழிப்புக்காக சுகாதாரத் தரப்பினர் பின்பற்றிய வீட்டுத் தனிமைப்படுத்தல் வேலைத்திட்டமானது, உலக சுகாதார ஸ்தாபனத்தின் விசேட பாராட்டைப் பெற்றுள்ளது என விசேட மருத்துவ நிபுணர் அநுருத்த பாதெனிய, கொவிட் ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தின்போது அறிவித்தார். (த-22)


## விற்பனைக்கு

புறோயிலர் சுத்தம் செய்தது 1Kg 650/= அத்துடன்
ஊர்ச்சேவல், பேரன்ஸ்,
கல்பேட், விறாத்துக்குஞ்சுகள்
விற்பனைக்குண்டு.

**தாசன் பாம்**
158/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
077 312 7498



## கண்ணீர் அஞ்சலி

சங்க உறுப்பினர் செல்வி ஞா.சர்மிளா அவர்களின் பாசமிகு சகோதரன்

**ஞானப்பிரகாசம் பிரகாஸ்**

அவர்கள் கடந்த 02.09.2021 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம் - சாவகச்சேரி.


## வாயால்...

இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஊடாக வாழைச்சேனையில் வாழ்வாதார உதவிகளை வழங்கியதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"தமிழக மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகள் காரணமாக வட பகுதி மீனவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். வட பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் முழுமையாக அழிவடைந்து வருகின்றது.

இதற்குக் காரணம், மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வாயால் மாத்திரமே அமைச்சருக்கான வேலைகளைச் செய்கின்றார். அவருடைய வேலைகளை அவர் பார்ப்பதில்லை.

கடந்த ஒரு வருடமாக நான் அவரிடம் முன்வைத்த எந்தவொரு கோரிக்கையும் நிறைவேற்றப்படவில்லை. நாடாளுமன்றத்தில் அதைச் செய்கின்றேன், இதைச் செய்கிறேன் என தெரிவிப்பார். ஆனால், இதுவரை இந்திய மீனவர்களைத்தடுக்க முடியாத நிலையில் உள்ளார். உண்மையிலேயே இந்த அரசாங்கம் புத்திசாலித்தனமான அரசாங்கம். ஏனெனில், தமிழர் ஒருவரை மீன்பிடி அமைச்சராக நியமித்து, தமிழகத்தில் உள்ள தமிழர்களையும் இலங்கையிலுள்ள தமிழர்களையும் மோதவிட்டு சிரித்துகொண்டு இருக்கின்றது. இதனை அமைச்சர் முதலில் உணர வேண்டும்.

அமைச்சர், தனக்குரிய வேலைகளை செய்யமுடியாவிட்டால் பதவி துறக்கவேண்டும்." - என்று சாணக்கியன் மேலும் தெரிவித்தார். (த-213)

## மற்றொரு...

செலவு செய்து ஜி.ஐ குழாய்களை கொள்வனவு செய்தமை தொடர்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அவருடன் திவிநெகும திட்டத்தின் கீழ்சிறிரணவக்க உள்ளிட்ட நால்வர் மீது குறித்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஜி.ஐ. குழாய்களுக்கு கேள்வி இருக்காதபோதிலும் அந்த நிறுவனங்களுக்கு பகிர்ந்தளித்துள்ளமையால் குற்றவியல் பயன்பாடு இடம்பெற்றுள்ளதாக சட்டமா அதிபரினால் மூன்று குற்றப்பத்திரங்களின் கீழ் இந்த வழக்கு நான்கு பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்தநிலையில், இந்த வழக்கின் குற்றச்சாட்டுகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு சட்டமா அதிபர் கருதவில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளமையால் மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்லே பிரதிவாதிகளை அந்த குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்தார். பஸில் ராஜபக்ச மீது சில வழக்குகள் தாக்கல்செய்யப்பட்டிருந்தன. கடந்தவாரமும் அவர் மீதான மற்றொரு வழக்கிலிருந்து அவர் விடுதலைசெய்யப்பட்டிருந்தார். (த-இ)

## வாயில் பிளாஸ்டருடன் ஆணின் சடலம் மீட்பு!

பொலிஸார் தீவிர விசாரணை

வாயில் பிளாஸ்டர் ஒட்டப்பட்ட நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் பன்னல பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதான குடும்பஸ்தர் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கேகாலை மாவட்டத்தில் உள்ள, துல்கிரிய மா ஓயாவுக்கு அருகில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது. இவரது வாயில் பிளாஸ்டர் ஒட்டப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் கடந்த 10 ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்தார் என்று அவரது மனைவி பன்னல பொலிஸ் நிலையத்தில் ஏற்கனவே முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த மரணத்தில் சந்தேகம் நிலவுவதால் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கேகாலை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-22)


## மரண அறிவித்தல்



**திருமதி வேலுப்பிள்ளை இராஜேஸ்வரி**

சாவகச்சேரி சிவன் கோவிலடியை பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு, சம்பியன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை இராஜேஸ்வரி கடந்த (13.10.2021) புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசித்தம்பி தங்கம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் சரஸ்வதி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், சுதர்ஷன், பிரகாஷ், தர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழில் நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயந்தினி, காயஸ்திரி, கிரிசாங்கர் (ஆசிரியர்) ஆகியோரின் மாமியாரும், பங்கஜன், கௌஷிகன், தனுஜன், சாத்விகாஷ், கிரிஷாங்கினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.10.2021 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சம்பியன் வீதி,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.
076 750 4576
074 014 7992



## நினைவலைகள்

13ஆம் ஆண்டு

தோற்றம்
09.06.1947



மறைவு
11.10.2008

அமரர் நடராசா அற்புதானந்தராஜா
திதி: ஏகாதசி (16.10.2021)

12ஆம் ஆண்டு ஆறாம் மாதம்

தோற்றம்
16.05.1954



மறைவு
10.04.2009

அமரர் சதானந்தராஜ் சோதிராணி

அன்பாலும், பண்பாலும், பாசத்தாலும்
எங்களை வழிநடத்தி நலமுடன் வாழ வைத்திருக்கும்
எம் ஆருயிர்த் தெய்வங்களே!
உங்களை இந்நாளில் நினைவு கூருகின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

கற்பகப்பிள்ளையார் வீதி, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

### போராட்டத்துக்கு...

எதிர்வரும்17ஆம்திகதிமுல்லைத்தீவில் இருந்து பருத்தித்துறை வரை படகுச்சவாரியும், 18ஆம் திகதி வடக்கு கிழக்கு கமநல சேவைகள் திணைக்களங்களின் முன்பாக போராட்டமும் நடத்த நாடாளுன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அழைப்பு விடுத்திருந்தார்.

இதற்கான அழைப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அழைப்பு என குறிப்பிடப்படவில்லை. தனியே, எம்.ஏ.சுமந்திரனின் அழைப்பு என்றே குறிப்பிட்டப்பட்டிருந்தது.

இந்த போராட்டங்கள் குறித்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, புளொட், ரெலோ ஆகியவற்றின் தலைவர்களிடம் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே அவர்கள் மேற்கண்டவாறு பதிலளித்தனர்.

மீனவர்கள், விவசாயிகளின் பிரச்சினைகளுக்காக போராட வேண்டும். அதை யாரும் தனி நபர்கள் செய்கிறார்களோ தெரியவில்லை. ஆனால் கூட்டமைப்பு 17, 18ஆம் திகதிகளில் போராட்டம் நடத்துமாறு முடிவுகளை எடுக்கவில்லை. அரசாங்கத்தின் கொள்கைகளால் விவசாயிகள், மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதற்காக நாடாளுமன்றுக்குள்ளும் வெளியிலும் கூட்டமைப்பு தொடர்ந்து குரல் கொடுக்கும்.

இந்த விடயங்களை கையாள்வது குறித்து கூட்டமைப்பு ஆராயும். அதே நேரம், அரசியல் உள்நோக்கங்களுடன் சிலர் இந்த விவகாரங்களை கையிலெடுத்து, கூட்டமைப்புக்குள் வீணான குழப்பங்களை ஏற்படுத்துபவர்கள் தொடர்பில் அவதானமாக இருக்கிறோம்." என்று தெரிவித்தனர். (கு-இ)

### போராடுகின்றோம்...

வைப்பதா? அல்லது இந்த பிரச்சினையை வைத்து குளிர்காய்வதா? என்கிற கேள்வி எழுகிறது என்றும் அவர் சந்தேகம் வெளியிட்டார்.

மீனவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகோரி, வடக்கு கிழக்கில் போராட்டம் நடத்தவுள்ளோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அண்மையில் கூறியிருந்தார்.

இந்தநிலையில், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், யாழ். ஊடக அமையத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தியது.

அதன்போது இன்பம் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய இழுவை மடித்தொழிலால் மீன் வளங்கள் அழிக்கப்படுகின்றன. எமது தொழில் வளங்களும் நாசமாக்கப்படுகின்றன.

அண்மையில் வடமராட்சியில் மீனவர்கள் தங்களுக்கு ஏற்பட்டுவரும் பிரச்சினைகள் தொடர்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அது அவர்களுக்கு மட்டுமான பிரச்சினை அல்ல, ஒட்டுமொத்த மீனவர்களுக்குமான பிரச்சினை.

மீனவர்களுடைய பல்வேறு பிரச்சினைகளுக்காக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் குரல் கொடுத்து வந்தநிலையில் அதனை அரசாங்கமும் அரசாங்க தரப்பினரும் குழப்புகின்ற வேலைகளைச் செய்துவருகின்றனர்.

மீனவர்களுடைய பிரச்சினை அரசியல் நோக்கத்துடன் கையாளப்படுகின்றது. இரண்டு நாட்டு மீனவர்களுக்கும் மோதலை ஏற்படுத்துவதற்காக ஒரு சிலர் திட்டமிட்டு செயற்படுகின்றனர்.

அவர்களிடையே முரண்பாடுகளை தோற்றுவித்து அவர்களை பலிக்கடாவாக்குகின்ற செயற்பாடுகளுக்கு ஒரு சில கோடரிக் காம்புகளும் துணை நிற்கின்றன. யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதரை எமது மீனவ சங்கங்கள் சந்தித்தபொழுது. இலங்கை கடற்றொழில் அமைச்சர் எதுவும் செய்யவில்லை என்றும் நாங்கள் இந்த விடயத்தில் எந்த முடிவும் எடுக்க முடியாது என்றும் உரிய தரப்புகளுக்கு தெரியப்படுத்துவோம் என்றும் தூதர் தெரிவித்திருந்தார். - என்று இன்பம் தெரிவித்தார்.

ஊடகசந்திப்பில் கலந்துகொண்ட ஒத்துழைப்பு இயக்கத்தின் ரட்ணசிங்கம் முரளீதரன் கருத்து தெரிவிக்கையில்,

தற்பொழுது கடல்நீரை நன்னீராக்கும் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தத் திட்டத்தின்போது கடல் நீர் சுத்திகரிக்கப்பட்டு அதில் உள்ள உப்பு செறிவு மீண்டும் கடலில் கலக்கின்ற ஓர் அபாயநிலை காணப்படுகின்றது. இதன் காரணமாக கடல் வாழ் உயிரினங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதற்கான சூழல் காணப்படுகின்றது. கரைப்பகுதியில் மீன்களின் செறிவு குறைவாக காணப்படுவதுடன் கரைவலை தொழிலை மேற்கொள்வோருக்குப் பாதிப்பாக அமையும்.

வெளிநாட்டு மீனவர்கள் இலங்கை கடலில் மீன் பிடிப்பதற்கான பாஸ் நடைமுறை வழங்குவதற்கானதிட்டமொன்று தற்போது பரிசீலனையில் உள்ளது. இது மிகவும் ஆபத்தானது என்று தெரிவித்தார். (கு-20)

### படகுகளை...

யினர் ஏற்கமறுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. அதனால், குறித்த 2 படகுகளும் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தில் துறைமுக காவலாளியின் காவலிலேயே வைக்கப்பட்டுள்ளன.

மீனவர்கள் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும்நிலையில் படகுகளை ஏற்க கடற்படையினர் மறுத்துள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

அதனால், நீரியல்வளத்துறையினருக்கும், கடற்படையினருக்குமிடையே பெரும் இழுபறி நிலை ஏற்பட்டிருந்தது. இந்நிலையிலேயே, இரண்டு படகுகளும் மயிலிட்டி மீன்பிடித்துறை முகத்தில், துறைமுக காவலாளியின் காவலில் கட்டப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (கு-20)

### விபத்தில்...

சேர்ந்த வரதன் நிரோசன் (வயது - 24) என்பவரே சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

அவர் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது தனக்கு முன்பாகச் சென்றுகொண்டிருந்த வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்டார். அதன்போது எதிரே வந்துகொண்டிருந்த டிப்பர் வாகனத்துடன் மோதுண்ட அதேநேரம், அவரது மோட்டார்சைக்கிளுக்குப் பின்பாக சென்றுகொண்டிருந்த கார் மீது வீழ்ந்து விபத்துக்குள்ளானார் என்று விசாரணையில் பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டநிலையில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. அவர் பயணித்த மோட்டார்சைக்கிளும் கடுமையாகச் சேதமடைந்தது. சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கு-9.159)

### உள்ளூர்...

வால் அதிகரிக்கப்பட்டு 470 ரூபாவாக விற்பனை செய்யப்படும். ஒரு கிலோகிராம் ஹைலண்ட் பால்மாவின் விலை 225 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு ஆயிரத்து 170 ரூபாவாக விற்பனை செய்யப்படும்.

இதேவேளை, பெல்வத்த நிறுவனமும் பால்மாவின் விலையை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, 400 கிராம் பால்மா விலை, தற்போது 460 ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் பால்மா பொதியின் விலையை 250 ரூபாவால் அதிகரிக்க கடந்த 9ஆம் திகதி பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் நடவடிக்கை எடுத்தமை குறிப்பிடத்தக்கது. (கு-இ)

### சட்டமா...

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் எடுத்துள்ள தீர்மானத்தைச் சவாலுக்கு உட்படுத்தி, காணாமல் ஆக்கப்பட்ட இளைஞர்களின் உறவினர்கள் நால்வரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த எழுத்தாணை மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, வசந்த கரன்னாகொட மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை நீதிமன்றத்தில் முற்படுமாறு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

2008ஆம் ஆண்டு கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்தில் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொடவும் தொடர்புபட்டுள்ளார் என்று குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தனக்கு எதிராக மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரத்தை வலுவிழக்கச் செய்யக் கோரி, வசந்த கரன்னகொட ரிட் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனு கடந்த 13ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சட்டமா அதிபர் சார்பில் முற்பட்ட அரச சட்டத்தரணி அவந்தி பெரேரா குற்றப்பத்திரத்தை நீக்கிக்கொள்கின்றேன் என்று அறிவித்திருந்தார்.

இந்தநிலையில், சட்டமா அதிபரின் குறித்த தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யுமாறுகோரி, காணாமல் ஆக்கப்பட்ட இளைஞர்களின் உறவினர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்வரும் 29ஆம் திகதி மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய மனுவின் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை அன்றைய தினத்தில் முற்படுமாறு மன்று கட்டளை பிறப்பித்துள்ளது. (கு-22)

### தொற்று....

பீடத்தின் 70க்கும் மேற்பட்ட மாணவர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்றுக்குள்ளான புதுமுக மாணவர்களை பகிடிவதைக்கு உட்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் அவர்கள் இடைநீக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சிரேஷ்ட மாணவர்களின் பகுத்தறிவற்ற நடத்தையால், பல்கலைகழகத்துக்குள் கொரோனா பரவல் தீவிரமாகி, கடந்த மாதங்களில் பெரும் நெருக்கடியேற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக புகுமுக மாணவர்கள் சிலர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அவர்கள் சிகிச்சை நிலையங்களுக்கு செல்லாமல், பல்கலைக்கழக விடுதிகளிலேயே தங்க வேண்டுமென சிரேஷ்ட மாணவர்கள் கட்டுப்பாடு விதித்துள்ளனர். இதனால் புதுமுக மாணவர்கள் விடுதிகளிலேயே தங்கியுள்ளனர். இதன்மூலம் மாணவர்கள் மத்தியிலும், பல்கலைக்கழக ஊழியர்கள் மத்தியிலும் கொரோனா பரவல் ஏற்பட்டது என்று தெரியவந்துள்ளது.

பகிடிவதையுடன் தொடர்புபட்டவர்கள், தொடர்புபடாதவர்கள் என மூத்த மாணவர் தொகுதியினர் முழுமையாக இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளும் இந்த பகிடிவதையுடன் தொடர்புபட்டுள்ளனர் என்று பல்கலைக்கழக நிர்வாகத் தரப்புகளிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன. (கு-இ)

### முதலமைச்சராக...

இருக்கின்றேன்."

இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் நேற்று தெரிவித்தார்.

“மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால் நீங்கள் முதலமைச்சர் வேட்பாளராகக் களம் இறங்குவீர்களா?” எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கும்போது,

"என்னை அரசியலுக்குள் கொண்டு வருவதற்கு கட்சிகளின் தலைவர்கள் பலர் சேர்ந்து எத்தனையோ முறை அழைத்ததன் பேரில்தான் இறுதியாக உடன்பட்டேன். இப்போதும் எங்கள் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இணைந்து நீங்கள் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட வேண்டும் எனக் கேட்டால் அது என்னுடைய கடமை என ஏற்று மீண்டும் களத்தில் குதிக்கத் தயாராக இருக்கின்றேன்" என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமாக எந்தவித பேச்சும் நடைபெறவில்லை. எல்லாக் கட்சிகளும் இணைந்து சில விடயங்களை அரசுடன் பேச முடியுமா என்பது தொடர்பாகவே ஆராயப்பட்டு வருகின்றது. அதில் மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமான பேச்சுகள் இது வரை நடைபெறவில்லை.

மாகாண சபைத் தேர்தலை அரசு தற்போதைக்கு நடத்தாது என்பதே என்னுடைய கருத்து. அரசிடம் பணமில்லை. கருத்துக் கணிப்பு மூலமாக அரசு தனக்குள்ள ஆதரவு குறைந்துள்ளதை உணர்ந்துள்ளது. ஆகவே, மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் பிரச்சினை ஆகிவிடும் என்கின்ற அடிப்படையில் அவர்கள் தேர்தலைத் தள்ளி வைக்கவே விரும்புவார்கள்.

**சிங்கள பௌத்த அரசமைப்பு**

அரசுக்கு மாகாணசபையைத் தொடர்ந்தும் வைத்திருக்கக்கூடாது என்ற எண்ணமே இருக்கின்றது. புதிய அரசமைப்பின் மூலம் மாகாண சபை முறைமையை நீக்கி முற்றிலும் சிங்கள பௌத்த அரசமைப்பைக் கொண்டு வருவார்களோ என்பது எனது சந்தேகம்- என்றார். (கு-22)

# சம்பியனானது சென்னை



டுபாய், ஒக். 16

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற இறுதியாட்டத்தில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது சென்னை சுப்பர் கிங்ஸ். ஐ.பி.எல் தொடரில் சென்னை அணி கைப்பற்றிய நான்காவது கிண்ணமாக இது அமைந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களான டுபிளஸி, ஹெய்க்வாட் இருவரும் அற்புதமான ஆரம்பத்தை அமைத்துக் கொடுத்தனர். இந்தத் தொடரில் சென்னை அணியின் துடுப்பாட்டப் பெரும்பலமே அதன் ஆரம்ப இணைதான். அணி குவித்த ஒட்டுமொத்த ஓட்டங்களில் கிட்டத்தட்ட 50 வீதமான ஓட்டங்களை இந்த இணையே குவித்துத் தள்ளியுள்ளது. நேற்றும் ஆரம்ப வீரர்கள் இருவரும் தம் கடமையைச் செய்யத் தவறவில்லை. இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களைக் கடந்தது சென்னை. அணி 61 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஹெய்க்வாட். டுபிளஸி ஒரு முனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனையில் உத்தப்பா 15 பந்துகளில் 31 ஓட்டங்களைக் குவித்து மிரட்டினார். மொய்ன் அலி, டுபிளஸி இருவரும் இணைந்து அற்புதமான ஆட்டத்தை வழங்கினார்கள். மொய்ன் அலி 20 பந்துகளில் 37 ஓட்டங்களையும், டுபிளஸி 86 ஓட்டங்களையும் குவிக்க சென்னை சுப்பர் கிங்ஸ் 192 ஓட்டங்களைக் குவித்தது.

பந்துவீச்சில் நரைன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிங்கிய கொல்கத்தா அணிக்கு ஆரம்ப வீரர்கள் சிறப்பான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர். வெங்கடேஸ் ஓட்டமெதையும் பெறாத நிலையில் இருந்தபோது அவர் கொடுத்த இலகுவான பிடியெடுப்பை டோனி தவறவிட்டார். அந்தத் தவறு 10 பந்துப்பரிமாற்றங்கள் வரை ஆட்டத்தில் சென்னையின் ஆதிக்கத்தை இல்லாமலே செய்தது. வெங்கடேஸ் ஒருமுனையில் அடித்தாடினாலும் 190க்கும் அப்பால் உள்ள ஓட்டத்தை எட்டக்கூடிய சராசரியில் கில் விளையாடவில்லை. மிக மந்தமான பாணியில்தான் அவர் விளையாடிக் கொண்டிருந்தார். இது அந்த அணியைச் சரிவுக்குள் தள்ளியது. 50 ஓட்டங்களுடன் வெங்கடேஸ் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் கொல்கத்தா அணி தோல்வியை நோக்கி நடைபோட ஆரம்பித்தது. 43 பந்துகளில் வெறும் 51 ஓட்டங்களையே கில் சேர்த்தார். இவர்கள் இருவரையும் தவிர வேறெந்த முன்னணி வீரர்களும் பெரிதாகச் சாதிக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் ஒற்றையிலக்கத்தையே தாண்டவில்லை. ரணா 0, நரைன் 2, மோர்கன் 4 என்று அடுத்தடுத்து ஆட்டமிழக்க கொல்கத்தாவால் 165 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

பந்துவீச்சில் தாகூர் 3 இலக்குகளையும், ஜடேஜா, ஹேசில்வூட் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம)

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வர்த்தக நிலையமொன்றிற்கு வேலையாள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

077 419 5015

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாண நகரில் இரண்டு கிலோ மீற்றர் சுற்றுவட்டத்தில் தொழில்புரிவோர் தங்கு வதற்கு சிறிய வீடு வாடகைக்கு உடன் தேவை.

077 724 2583

## காணி விற்பனைக்கு

யாழ், கோப்பாய், உரும்பிராய் பிரதான வீதியில் 9 பரப்பு காணி விற்பனைக்கு.
(உரும்பிராய் கிருஸ்ணன் கோவிலுக்கு அருகாமை)
காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை தொடர்பு கொள்ளவும். (1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்).

077 468 3354 (குரு), 077 288 0152, 077 505 8561


## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வீமன்காமம் வடக்கு பழைய தபாற் கந்தோர் ஒழுங்கையில் K.K.S வீதியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் வீமன்காமம் சந்தையின் வாசலுக்கு நேர் எதிரே உள்ள நிலப்பரப்பு 36 குளி 16.45 குளிக் காணி விற்பனைக்கு உண்டு.

R. செல்வநாயகம்

077 396 0224 / 074 049 4027

## மரண அறிவித்தல்



### திரு. நாகநாதர் இராஜரட்ணம்

(ஓய்வுபெற்ற சாலை முகாமையாளர், வடபிராந்திய போக்குவரத்து சபை, மன்னார் சாலை, காரைநகர் சாலை)

சிறுவிளான் இளவாலையை பிறப்பிடமாகவும் பிறவுன் வீதி, நீராவியடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நாகநாதர் இராஜரட்ணம் நேற்று (15.10.2021) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதர், விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா கண்ணாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், மனோகரி (கௌரி) யின் அன்புக் கணவரும், உதயகரன் (HNB), திவிஷா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான நாகரட்ணம், சபாரட்ணம் மற்றும் இராசலஷ்சுமி, ருக்குமணிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற இந்திராணி மற்றும் புஸ்பராணி, செல்வராணி, சிவானந்தன், யோகேஸ்வரி, லீலாவதி, காலஞ்சென்ற ஜெயானந்தன் ஆகியோரின் அருமை மைத்துனரும், சிவச்செல்வனின் அன்பு மாமனாரும் அஜேஸ், றோஜன், பிரித்தா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2021) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இ.உதயகரன் - 0773608875
இல.04, 1ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சண்முகம் கனகரத்தினம்



பிறப்பு
13.06.1960

இறப்பு
13.10.2021

கண்டியைப் பிறப்பிடமாகவும் தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் கனகரத்தினம் அவர்கள் கடந்த (13.10.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பிரேமாவதியின் அன்புக் கணவரும், விமலன், விமலினி, வாகீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாபரனின் அன்பு மாமனாரும், யர்ஸ்மிகா, யர்னிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.10.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

076 608 3064



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.